இந்தியாவும் கிறிஸ்தவமும்

By

REV. V. D. SAHAYAM, M. A.

1956

இந்தியாவும் கிறிஸ்தவமும்

By

REV. V. D. SAHAYAM, M. A.
CHURCH OF SOUTH INDIA
NAGERCOIL

1956

6-Annas

விலை அணா 6

முன்னுரை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே 'சகாயம் பிரசங்கியார்' என அறியப்பட்டுத், தமிழ்நாட்டுச் சபைகளில் சுற்றி உழைத்த காலத்தில் பற்பல தருணங்களில் 'முசிப் பாற்றும் கீதங்கள்', 'ஆத்தும தத்துவம்', 'ஆத்தும மேய்ப்பர்', 'ஆத்தும வீரன்', நானும் பேயும்' என்னும் சிறுசிறு நூல்களை வெளியிட ஆண்டவர் எனக்கருள் செய்தார்.

மறுபடியும் தமிழ்ச்சபை மக்கள் முன் ஆண்டவர் எனக்களித்த கிருபைகளைப் பகிர்ந்து கொடுக்க முன்வந்துள்ளேன். இதை ஒரு பிரசங்கமென்றே எண்ணுகிறேன். அக்கருத்துடனேயே படிப்பவர்களும் இதைக் கையாளும் படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாகர்கோவில்,
20—8—1956.

வி. டி. சகாயம்.

இந்தியாவும் கிறிஸ்தவமும்.

அதிகாரம் 1.

தோமா கிறிஸ்தவர்கள்

இந்தியாவில் கிறிஸ்து மார்க்கப் பரவுதலை நாலு காலங்களாகப் பிரித்துக்கூறுவதும், ஒவ்வொரு காலத்தின் உயர்வு தாழ்வுகளைச் சிறிதே சீர்தூக்கிப் பார்ப்பதுமே இக்கட்டுரையின் பரந்த நோக்கம். சபைச் சரித்திரத்தின் பற்பல காலங்களைப் பின்னோக்கிப் பார்த்து அவற்றின் படிப்பினைகளை உட்கொள்ள முயல்வோம்.

சென்னை மாநகரில் கடலோரமாய் சான்தோமி என்ற சிற்றூர் இருக்கிறது. மயிலாப்பூரைச் சேர்ந்த அவ்விடத்தில் San Thome என்ற பெயரில் ஒரு கிறிஸ்தவ ஆலயம இருக்கிறது. அதைக்காணச் செல்வோர், ஆலயத்திற்குள் நிலைமட்டத்திற்குச்சற்றுக் கீழாய் ஒரு கல்லறையைக் காண்பார்கள். அதற்குள் இயேசுநாதரின் ஒரு சீடனை பரி. தோமாவின் எலும்புகள் அடக்கம் பண்ணப்பட்டதாக கூறப்படுகிறது.

சென்னைக்கு ஐந்து மைலுக்கிங்கே சைதாப் பேட்டை இருக்கிறது. அது அடையார் ஆற்றங்கரையில் உள்ளது. ஆற்றின் ஒரு கரையில் ஒரு சிறு குன்று இருக் கிறது. நூற்றைம்பது அடி உயரமுள்ள அச்சிறு குன்றின் சரிவில் ஒரு சிறு ஆலயம் இருக்கிறது. ஆலயத்தின் கிராதி அறை அளிக்குப் பக்கமாய் ஒரு சிறு கதவு போடப்பட்டி ருக் கி றது. அக்கதவினூடே வெளியேறுகையில் ஒரு பெரிய பாறைக்குள் இயற்கையாக அமைக்கப்பட்ட ஒரு கெபிக்குள் செல்லலாம். ஏறக்குறைய இரு பது அடி விட்டமாகக் (diameter) கொண்ட ஒரு வட்டக் கெபியின் நடு உயரம் 5½ அடியாகும். ஒரு ஆள் நிமிர்ந்து நின்றால் தலை தட்டக்கூடும். மற்றப்பாகங்களில் குனிந்தே போகக் கூடும். கதவின் எதிர்ப்புறத்தில் இரண்டரை அடி விட்ட முள்ள ஒரு துவாரம் பாறையிலேயே காணப்படுகிறது. ஒரு ஆள் அதன் வழியாய் நுழைந்து வெளியேறலாம். பரி. தோமா இதற்குள் ஒளித்திருந்தார் என்றும், எதிரிகள் பிடிக்க வந்தபோது இந்தத் துவாரம் வழியாய் வெளியேறி விட்டார் என்றும் பலர் சொல்லுவர்; சிலர் நம்புவர்.

அக்குன்றில் சில அடிதூரத்தில் ஒரு பிளந்த சிறு பாறையும் வெடிப்புக்குள் ஊற்று நீரும் காணப்படுகின்றன. அதை ஒரு கூரையால் பத்திரப்படுத்தியிருக்கிறார்கள். நீருக்காய் விடாய்த்த தோமா இங்கீரைப் பருகினார் என்றும், அன்று முதல் இன்று வரை அந்நீர் அங்கு ஊறிக் கொண்டேயிருக்கிறதென்றும் சிலர் சொல்லிக்கொள்ளுகிறார் கள். இதை இக்காலத்தில் விசுவாசியாமல் சந்தேகப்படுகிற தோமாக்களே ஏராளம். அங்கிருந்து இரண்டு மயிலுக்கப் பால் பரங்கி மலை என்ற St. Thomas Mount இருக்

கிறது. இது ஐந்நூறு அடி உயரமுள்ளது. இதன் உச்சியில் ஒரு சோமானித்தர் தேவாலயம் உண்டு. அதற்குள் தரையில் பதிக்கப்பட்ட ஒரு அடிகல்லில் லத்தீன் மொழியில் செதுக்கப்பட்ட சொற்கள் அந்த இடத்திலே "தோமா கொலே செய்யப்பட்டதாக எண்ணப்படும் இடம் இதுவே" என்று பொருள்படக் காணப்படுகின்றன.

பரங்கி என்பது போர்த்துகேயச்சொல். Pharinghee அன்னிய நாட்டான் என்று பொருள்படும். Foreigner என்ற ஆங்கிலச்சொல் அதனின்றே வந்தது. போர்த்துகேய வியாபாரிகள் இங்கு தங்கியிருந்த காலத்தே இம்மலைக்கு இப்பெயர் வந்தது. அவர்கள் காலத்தில் கட்டிய இந்தக் கோவிலைப் பற்றியே இந்தக் கதையும் எழுந்தது போலும்.

இந்த மூன்று கோவில்களைப் பற்றிய கதைகள் உண்மையோ அல்லவோ என்று நாம் சந்தேகிக்கக்கூடும். தோமா அப்போஸ்தலன் இந்தியாவின் தென்மேற்கு கரையிலிருக்கும் கொடுங்கோனூருக்கு (Cranganore) கி. பி. 52–ம் வருடம் வந்ததாகவும், தற்போது மலையாள மொழி பேசிவரும் கொச்சி வட திருவிதாங்கூரில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பல அற்புதங்களை செய்ததாகவும், சபைகள் நாட்டினதாகவும், நம்பூதிரி பிராமணர் சிலரும் அவருடைய பிரசங்கத்தால் கிறிஸ்தவர்களானதாகவும், சீரிய கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

இவற்றைக் குறித்து ஆராய்ச்சியாளர் பல புத்தகங்கள் எழுதியிருக்கின்றனர். அவற்றில் பற்பல வீதமான முடிவுகள் கூறப்படுகின்றன. காரியத்தின் கடைத்தொகை என்ன

வெனில், கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்தே தென் மேற்கு கடலோரத்தையடுத்த மலையோரங்களில் (Male-Malabar) கிறிஸ்தவ சபைகள் இருந்து வந்திருக்கின்றன. இதைக் குறித்த சந்தேகத்திற்கு இடமேயில்லை. இது சரித்திர பூர்வமான உண்மையாம்.

இந்தச் சபை சீரியன் சபை என்று அறியப்படுகிறது. தற்காலம் அதில் பத்து லக்ஷத்திற்கதிகம் அங்கத்தினர் இருக்கிறார்கள். யாவரும் மலையாளிகளே. Syria விலிருந்து பண்டைக்காலத்தில் சிலர் இங்கு வியாபாரத்திற்காக வந்து குடியேறினர் என்பது ஒரு கொள்கை. அப்படியிருந்தாலும் அது ஒரு வெகு சிலரையே குறிக்கும். உயர் குலத்தார் என்று எண்ணப்பட்ட ஒருசில நம்பூதிரிப் பிராமணரும் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவியிருக்கலாம். ஆகையால் இன்றிருக்கும் தோமா கிறிஸ்தவர்கள் சீரியாவிலிருந்து வந்தவர்களுமல்ல, பிராமண குலத்தவருமல்ல. நாட்டிலே யுள்ள நாயர், ஈழுவர் முதலிய கடுத்தர மக்களே ஓர்காலம் தாராளமாய் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினர்போலும்.

இவர்களிடமிருந்து இந்திய சபை படிக்கக்கூடிய பல நல்ல காரியங்களுண்டு. முதலாவது சாதிப்பிரிவினை சபைக்குள் இல்லாமை. தமிழ் கிறிஸ்தவர்கள் தங்கள் குலத்தையும் இனத்தையும் இன்னும் மறக்கும் காலம் வரவில்லை. தோமா கிறிஸ்தவர்கள் எவரும் தாங்கள் எந்த வகுப்பிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லக்கூடாத அளவு பழமையுடையவர்கள். கிறிஸ்தவர்களே ஒரு இனமாகிவிட்டனர். பணமும் படிப்புமிருந்தால் எவருக்கும் அவர்

கள் பெண் கொடுப்பார்கள். ஈழவகுலத்தினின்று கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவி, சில காலத்திற்குள் இப்புதுக் கிறிஸ்தவர்கள் எளிதில் தோமா கிறிஸ்தவர்களாகிவிடுகின்றனர்.

இரண்டாவது, தோமாக் கிறிஸ்தவ சபைகள் அனைத்திலும் எல்லா ஊழியர்களும் இந்தியர்களே. மெற்றிறாணியார் முதல் கோயில் பிள்ளை மட்டும் யாவரும் சுதேசிகளே. அவர்களுக்குரிய ஊதியமும் சபைகளினின்றே கிடைக்கின்றன. வெளிநாட்டுப்பணம் இவர்களுக்கு வருகிறதேயில்லை. எனினும் 1500 ஆண்டுகளாய் அச்சபைகள் வாழ்ந்தே வந்திருக்கின்றன.

இந்தத் தோமா கிறிஸ்தவர்கள் எல்லோரையும் 1599-ம் வருஷம் தந்திரமாய் சோமாளித்தர் தமது மந்தையில் சேர்த்துக் கொண்டனர். அது மட்டும் இந்தச் சபைக்குத் தலைவர் சிரியாவிலுள்ள அந்தியோகியா பிஷப்பேதான். காலாகாலங்களில் அவரோ அவரால் அனுப்பபட்டவர்களோ வந்து வேண்டிய பிஷப் பட்டாபிஷேகங்கள் நடத்தி, பெரும் வெகுமதிகளும் பெற்றுச் செல்வார்கள்.

சோமன் சபை கி. பி. 1599-ல் இதை விழுங்கினபின், 54 ஆண்டுகளுக்குப் பின்னால் இவர்களில ஒரு பெரும் பாகம் சோமா பிஷப் அல்ல, அந்தியோகியா பிஷப்பே எங்கள் தலைவர் என்று கொச்சியிலுள்ள ஒரு கல் குருசண்டை சபதம் செய்து, தங்கள் சுயாதீனத்தை அடைந்தார்கள். இப்படி சுயாதீனமடைந்தவர்களில் ஒரு சாரார் அந்தியோகியா அளவற்ற அதிகாரம் செலுத்தலாம் என்றும், மறு சாரார் அந்த அதிகாரம் மட்டுப்படுத்தப்படவேண்டுமென்றும், வாதாடி இருபிளவாய்ப் பிரிந்தனர். இவர்களில்

ஒரு பிரிவார் மறுபடியும் C. M. S. மிஷனரிமார் உதவியாலும், ஆபிரகாம் மல்பான் என்ற அவர்களில் ஒரு தலைவராலும், சுவிசேஷ சபையாய் 1893–ல் பிரிந்து மார்தோமா கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அதிக முற்போக்கானவர்கள்.

இப்படிப் பிரிந்து போயினும், அவர்கள் இந்திய பணத்தால் இந்திய தலைவருடன் கிழக்கத்திய சபையின் பற்பல சடங்காசாரங்களுடன் இன்றும் நிலைத்து வருகின்றனர்.

இவர்களில் காணப்படும் சில குறைகளையும் நாம் நன்குணர்தல் வேண்டும். தோமா கிறிஸ்தவர்கள் 'பெற்றுப் பெருகின' சபையாக நெடுங்காலம் இருந்தனரே தவிர, சுவிசேஷ ஊழியம் செய்ய முயலவில்லை. மலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட மலங்கரைகளில் அவர்கள் தங்கியிருந்தும் அவர்கள் நாட்டிலேயே தென் பக்கம் உள்ள தமிழர் மத்தியில் உழைக்கவில்லை. இவர்கள் மூன்னூறு ஆண்டுகளுக்குமுன் மட்டும் தமிழையே வழங்கி வந்தவர்போலும். மலையாளமொழி எழுத்தளவில் வந்து மூன்று நூற்றாண்டுகள் இன்னும் ஆகவில்லை.

மத். 28:6-ல் "வந்து பாருங்கள் சென்று சொல்லுங்கள்" என்று தூதர் சீஷருக்குச் சொன்ன வார்த்தைகளில் நமது மார்க்கத்தின் சாரம முழுவதும் அடங்கும். ஆண்டவரண்டை சென்று உயிர்த்தெழுந்த அவரைக் கண்டு அறிய வேண்டும். பின்னால் அவரை மற்றவர்களுக்குக் காட்டத் தக்கதாய் சுவிசேஷத்தைச் சொல்ல வேண்டும். கண்டவனே சொல்லுதல வேண்டும். இல்லையேல் பயனேதும் உண்டாகாது. சென்று சொல்லாத சபை, இயேசுநாதரை

வந்து காணுத சபையாகும். கண்டவன் சொல்லியே தீரு வான். ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்ட ஆட்களும் சபையாரும் வாந்திபண்ணப்பட்டுப்போவார்கள். தோமா கிறிஸ்தவர்களின் இந்தக் குறைவே நம் நாட்டின் பெருங்குறைவாய்ப்போயிற்று.

இவர்கள் மத்தியிலேயே காலடி என்ற ஊரில் தோன் றின சங்கரன் என்னும் நம்பூதிரி பிராமணர் 1000 ஆண்டு களுக்குமுன் புதிய வெளிச்சம் அடைந்து (கிறிஸ்துமார்க் கமும் முஸ்லீமும் சேர்ந்தே அத்வைத கொள்கையை வலி யூட்ட ஆதி சங்கராச்சாரிடரைத் தூண்டினான் என்பாரு முண்டு) இந்தியா முழுவதும் சுற்றி வேதாந்தக்கொள்கை யைப் பெரிதும் நிலைநிறுத்தியிருக்க, தோமா கிறிஸ்தவர் கள் தூங்கிவிட்டது பெரும் நஷ்டமேயாகும். எறும்பு ஊருவதுபோல் அவர்கள் அசைந்திருந்தால்கூட இதற்குள் இமயம் மட்டும் எட்டியிருக்குமே.

அதிகாரம் 2.

ரோமானித்தர்

கொலம்பஸ் அமேரிக்காவைக் கண்டுபிடித்த அதே காலத்தில், போர்த்துகீசியனாகிய வாஸ்கோடி காமா ஆப்பிரிக்காவின் தென் மூலையைச் சுற்றி பாய்க்கப்பலில் இந்திய கரையைச் சேர்ந்தார். அந்நாட்டார் வணிகத்துறையில் முன்னேறி,1500-ம்வருடத்தில் மேற்குக்கரையோரமான கோவா, கொல்லம், கொடுங்கோனூர், கோழிக்கோடு முதலிய துறைமுகங்களில் எல்லாம் தங்கள் பண்டகசாலைகளை நிறுவி தழைத்து வந்தனர். போர்த்துக்கீசிய கப்பல்களில் ரோமன் சபைக் குருக்களும் வந்து, அம்மக்களுக்குள் ஆன்மீகச் சேவை செய்துவந்தனர். கொஞ்சக்காலத்திற்குள் அவர்கள் தங்கிய இடங்களில் எல்லாம் இந்திய பெண்களுடன் கலந்த பயனாய் ஒரு கூட்டம் இரு பிறவிகள் தோன்றினர். இந்நாட்டார் அவர்களை இகழ்ந்து தள்ளினர். தொகைபெருகவே மதக்குருக்கள் இவர்களை ரோமான் சபையில் சேர்த்தனர்.

1534-ல் தென்கிழக்கு, தென்மேற்கு கடலோரங்களில் மீனவர் அனைவரும் அரசியல் நெருக்கடி நீங்கவேண்டியும், வேறு காரணங்களாலும் ரோமன் சபையைச் சேர்ந்தனர். 1542-ல் சவேரியார் (Francis Xavier) இச்சபைகளை ஒழுங்குப்படுத்தி உறுதிப்படுத்தினர். அவர் நாகர் கோவிலுக்கடுத்த கோட்டாற்றில் பிரசங்கித்த இடம் இன்றும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இவரைப்பற்றிய கதைகள் பிற்காலத்தில் ஏராளமாய் எழுந்தன. அவற்றுள் ஒன்று, இவர் படகில் ஜெபமாலையுடன் ஜெபித்துச்செல்கையில், கைதவறி சிறு சிலுவை கடலில் விழுந்து விட்டதாம். பின் ஒரு நண்டு அதைத் தூக்கியெடுத்துக்கொடுத்ததாம். அந்த நண்டினத்தின் மீதெல்லாம் சிலுவையடையாளம் இப்போது காணப்படுகிறதாம். அணிலின் முதுகிலுள்ள கறுப்புக்கோடுகள் தோன்றியதைக் குறித்த சாமர் கதைக் கொத்ததே நண்டுக்கதையும் என்க.

கதை எப்படியிருப்பினும் சவேரியார் நாட்டிய சபைகள் நானூறுண்டுகளாய் நிலைத்து நிற்கின்றன. ரோமான் சபையின் அழகிய ஆலயங்கள் கடற்கரைகளைச் சிறப்பிக்கின்றன. கன்னியாகுமரிக்குச் செல்லும் யாத்திரிகர்கள், முதல் முதல் அங்கு காண்பது கிறிஸ்தவ ஆலயமே. பிற்காலங்களில் வந்த ரோமன் மிஷனரிமார் மீனவரைத் தவிர, வேறு இனத்தாரையும் சபையில் ஏராளமாய் சேர்த்துவருகின்றனர்.

அச்சபை இந்நாட்டில் தோன்றி மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் இந்நாட்டவரில் குருத்துவ ஊழியத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டோரைத் தவிர, மற்றவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தாரில்லை. கடந்த ஐம்பதாண்டு

களில் ஜெசுயிட்ஸ் (Jesuits) என்பவர்களால் இங்கிலே முற்றிலும் மாறி, தற்போது (1951 census) பல்கலைக் கழகத் தொடர்புற்ற 42 கல்லூரிகளில் 22000 மாணவர்கள் (3600 பெண்கள்) கற்று வருகின்றனர்.

தற்போது இந்திய கிறிஸ்தவர் மொத்தம் ஒரு கோடியென்றால், ரோமன் கத்தோலிக்கர் 48 லக்ஷமும் மீந்தோர் 52 லக்ஷமும் என்பது ஒரு பொது மதிப்பு.

ரோமன் சபையின் சில முக்கிய குணங்கள்.

முதலாவது அதன் சிறந்த உறுதியான கட்டுப்பாடு. சபையாட்சி முறையில் இதை கீழிருந்து மேல் மட்டும் ஒருங்கே கட்டியுயர்த்தப்பட்ட ஒரு கோபுரத்திற்கொப்பிடலாம். போப்பாண்டவர் சபைக்குத்தலே. இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று ஆண்டவர் பேதுருவுக்குச் கூறின மொழிகள் தங்களுக்கே தகும் என்றும்; பரி. பேதுரு ரோமாபுரியில் முதல் அத்தியக்ஷராகொன்றும், அதன்பின் இப்மட்டும் தொடர்பாய் அந்த அதிகாரம் தங்களுக்கே கிடைத்து வந்திருக்கிறதென்பதும் அவர்கள் கொள்கை. அக்கொள்கையைச் சிறிதேனும் சந்தேகிக்கிறவர்களுக்கு ரோமன் சபைக்குள் இடமில்லே.

அச்சபையின் மக்களுக்குள் இதர சபைகளில் வேளர, வேலைகளில் காணப்படும் கட்டுப்பாடின்மை என்பதற்கு இடமேயில்லே. ரோமானிஸ்தர் எதை எந்தெந்த நாட்களில் உண்ணலாம் உண்ணக்கூடாதென்பதில்கூட போப்

பாண்டவ நக்குக் கட்டுப்பட்டு கீழ்ப்படியவேண்டும். வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் மாமிசம் உண்ணுவதில்லை. கிறிஸ்மஸ் பண்டிகை வெள்ளிக்கிழமையில் வருகையில் இந்த விலக்குவிதி மாற்றப்பட்டு, பண்டிகை வேளையில் மாமிசம் உண்ணலாம் என்ற கட்டளையைச் சபை பிறப்பிக்கிறது. யாவரும் கீழ்ப்படிகிறார்கள். இவ்வாறே பிறவும் என்க.

ரோமன் சபையில் பணக்குறைவென்பதே கிடையாது. அவர்கள் அழகிய ஆலயங்களைக் கட்டத் துவக்கினபின் வேளாவேளைகளில் ஊர் பிளவு பட்டால் தவிர, மற்றப்படி பணக்குறைவினால் வேலை நிறுத்தப்படுகிறதேயில்லை. சபைக்குக்கொடுக்கவேண்டியவரி விஷயங்களில் உறுதியான கட்டுப்பாட்டுக்கு யாவரும் அடங்கி நடக்கிறார்கள். மீனவர் மத்தியில் ஞாயிறும், பண்டிகை நாட்களும் தவிர, மற்ற நாட்களில் மட்டுமே மீன்பிடிக்கக் கடலில் செல்கின்றனர். கணக்கிடில் வாரத்தில் ஐந்து நாட்களில் மட்டும் தான் வேலைக்குரியது. ஒவ்வொரு வாரத்திலும் எந்த நாளையாவது கோயிலுக்கென்று தெரிந்துகொள்ள அந்தந்த ஊர் சபைக்குருவின் ஆளுக்கு அதிகாரமுண்டு. மிகுதியான மீன் கிடைக்கும் நாளையே இயற்கையாய்த் தெரிந்துகொள்வார். நாள்குறிக்கப்பட்டபின் அந்நாளில் கிடைக்கும் மீன்களில் மூன்றிலொரு பங்கு கோயிலைச் சேருகிறது. ஏலம்போட்டு உடனடி பணமும் கிடைத்துவிடுகிறது. மீன் பிடிக்கும் கிறிஸ்தவர்கள் ஆஸ்கியில் ஏறக்குறைய ரூபாய்க்கு ஒரு அணா கோயிலைச் சேர்க்கே தீரும். இது தவிரவும் சுறாமீன் யார் பிடித்தாலும் அதன் (Fins) பூக்கொத்துக் கோவிலைச்சேரவேண்டும் என்பது வழக்கச் சட்டம். வருடத்தில் இந்த வகையினின்று மட்டுமே இருபதினாயிரம் ரூபாய் வரை ஒரு சிறு ஊரில்

கிடைக்கிறது. இப்பொது வரிகள் தவிர ஆளாளுக்குச் சபைப் பணிவிடை தேவைப்படுகிற போதெல்லாம், வேறு பலவித வரிகளும் செலுத்தப்படாவிட்டால் அப்பணிவிடைகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இவ்விதமாக பணக் குறைவினால் எந்த நல்லவேலையும் ரோமன் சபையில் எப்போதாகிலும் நடவாதே போகிறதில்லை.

மூன்றாவது லத்தீன் மொழிக்குரிய மேலிடம் எந்நாட்டிலும் ஆராதனைகளில் கொடுக்கப்படுவதாம். அண்மையில் தான் நாட்டுமொழிகளில் வேதவாசிப்பும் பிரசங்கமும் ஆரம்பித்திருக்கிறார்கள். பரி. நற்கருணை ஆராதனை இன்றும் உலகமெங்கும் லத்தீன் மொழியிலேயே நடத்தப்படுகிறது. இதனால் சபையின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது.

அறிவில் குறைந்த மக்களுக்கு அடையாளம் தேவையாகிறது. யூதர்கள் அடையாளத்தைத் தேடுவார்கள். அந்தந்த நாட்டின் பழக்கவழக்கங்களுக்கிசைய தேர், சப்பரம், திருவிழா கொண்டாட்டம் இவைக்கு ரோமான் சபையில் தாராளமாக இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காலாகாலங்களில் புதுமைகள் நடக்குமிடங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. பாமரமக்கள் ஏராளம் சென்று திருப்தியடைகிறார்கள். சில வணக்கத்தினின்று சபையில் சேரும் புதுக்கிறிஸ்தவர்களுக்கு அழகிய உருவச்சிலைகளைக் கண்டு மகிழத்தக்கதாய் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இப்படியாக உறுதிக்குரிய கட்டுப்பாடு, பணம், சிட்சை (discipline) இவை எவரும் புகழக்கூடியதாயினும், சிற்சில குறைகளும் இவற்றினூடே தழைவது இயல்பே. அவையாவன: குருத்துவ ஆதிக்கத்தால் ஏற்படும் புரட்சி, அறிவுயர்வதால் நிகழும் எதிர்ப்பு இவைகள் அச்சபையிலும் தலைகாட்டத்தவக்கிவிட்டன.

பள்ளிக்கூடங்களை அந்தச் சபை வெகு பிந்தியே ஆரம்பித்ததினிமித்தம் அவர்கள் தொகைக்கேற்ற செல்வாக்கை, அரசியல் முதலிய பொதுக் காரியங்களில் செலுத்த நெடுகாலம் வலிமையற்றேபோயிற்று. ஆயினும் அக்குறைகள் அதிக காலதாமதமின்றி பரிகரிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. சபை வளர்ச்சியில் சற்றுக் குறைவு ஏற்படத் தொடங்கியிருக்கிறதோ என்றும் சந்தேகப்பட ஏதுவிருக்கிறது. கடந்த முப்பது வருட காலத்தில் ஐரோப்பிய பிஷப்புகள் வரவரக்குறைக்கப்பட்டு 1952–க்குள் இருபத்தி மூன்று இந்திய பிஷப்மார் அங்கு பதவியேற்கலாயிற்று. 1953–ல் முதல் முதல் இந்திய கார்டினல் ஒருவரும் நியமிக்கப்பட்டனர்.

குருத்துவ ஊழியப் பயிற்சி பெறுவோர் அங்கு இத்தாலிய தேசத்தில் எதைப்படிக்கிறார்களோ அதையே படிக்கின்றனர். லத்தீன் "சங்ககால" நூல்களையும் (classics) பதினேன்றும் நூற்றாண்டில் தோன்றிய திருச்சபைப் பிதாதாமஸ் அக்குயினஸ் என்பவர் எழுதிய தத்துவ நூல்கள் மட்டும் ஆழமாய் கற்கின்றனர். அதற்குப்பின் எழுந்த புதிய அறிவை அவர்கள் மதியாமலும் படியாமலும் போனதால் தற்கால இந்தியாவில் எழுந்து நிற்கும் பற்பல புதிய இயக்கங்களையும், இந்திய பட்டாங்கு நூல்களுக்குரிய சிந்தனைகளையும் அசட்டை செய்து கிறிஸ்தவ உண்மைகளை இந்திய முறைகளில் விளக்கிக்கூறவும் கூடாதேபோயினர். இந்தியாவுக்கு தோமா கிறிஸ்தவரால் அதிகப் பயன் ஏற்படாததுபோலவே ரோமன் சபையாலும் ஏற்படவேண்டிய அளவு பயன் ஏற்படாதேயே போயிற்று என்பது உண்மையல்ல என்று துணிந்து கூறவும் கூடியதன்று.

அதிகாரம் 3.

Protestant Missionary Period
1706-1900

சீர்திருத்த சபைகள்

1706–ம் வருடம் ஜூலை மாதம் 9–ம் தேதி தரங்கம் பாடித்துறைமுகத்தில் ஒரு பாய்க்கப்பல் நங்கூரமிட்டது. டென்மார்க்கு நாட்டைச் சேர்ந்த அவ் வணிகத்துறைக்கு பொருளேற்றி வந்த கப்பலில் இரண்டு ஜர்மனப் பிரயாணிகள் இருந்தனர். 'சுத்த சுவிசேஷ சத்திய ஜத்தரன்' உபதேசத்தை இந்தியாவில் பரப்ப ஆவல்கொண்ட சீகன்பால்டு ப்ளுட்சோ என்ற இந்த இருவரும் கப்பலைவிட்டு இறங்க அனுமதியின்றி இரண்டு நாட்களை கப்பலிலே கழித்தனர். இறங்கிய பின்னும் ஒரு நாள் முழுவதும் உணவின்றி ஒதுங்கக் கூரையின்றி சுடல் மணலிலே நின்று தவித்தனர். அன்னவர் நாட்டாரான டேனிஷ் கவர்னரும் இதர உத்தியோகஸ்தருமே இத்தடைக்குக் காரணமாயிருந்தனர்.

இவர்கள் தங்களைப்பள்ளியில் தமிழ் எழுத்துக்களை முறைப்படியே மணலின்மேல் விரலால் எழுதிக்கற்று, அம் மொழியில் தேறி கிறிஸ்தவ விவிலிய நூலையும் தமிழில்

மொழிபெயர்க்க முயன்று சிறிதளவு செய்து முடித்தனர். இவர்களே இந்திய சீர்திருத்த கிறிஸ்தவ சபைக்கு அடிக் கல்லிட்டவர்கள்.

பரலோக ராஜ்ஜியம் (திருச்சபை) ஆலவிதைபோன் றது. அது விழுந்த ஒரு கல்கோட்டையில் சிறுசெடி தோன்றி காற்று, மழை, வெயில், பனி முதலியவற்றின் உதவியாய் ஏற்றகாலத்தில் பல கிளைகளுள்ள பெரும் மரமாய் விழுதுவேர்களும் இறக்கி, தாய்மரம் மரண்டபின் னும் வேர் மரங்கள் படர்ந்து, முடிவில் பிரமாண்டமான மர மாகி கோட்டையை இடித்து இருந்த இடம் தெரியாதாக் கிற்று. அப்படியே கிறிஸ்துமார்க்க வளர்ச்சியுமென்க.

சீகன்பால்டு, புளுட்சோ வந்த ஒரு நூறாண்டுக்குப்பின் கல்கத்தாவில் உல்லியம்கேரி என்னும்பண்டிதர் பாப்திஸ்து சபையின் மிஷனரியாக வந்தார். அவர் 1833-ம் வருடத்திற் குள் இந்திய மொழிகள் நாற்பதில் வேத புத்தகப் பாகங் களை மொழி பெயர்த்தார். 1800-ம் வருடப் பக்கமாய் பற்பல மிஷன்கள் (L. M. S., C. M. S. போன்றவை) இந்தியாவில் உதயமாயின. தற்சமயம் நூற்றுக்கதிகமான பிரிவுகளாலாக்கப்பட்ட சீர்திருத்த சபையில் 53 லக்ஷம் கிறிஸ்தவர்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றனர்.

தற்கால இந்தியா அடைந்த உயர்வுக்கெல்லாம் இவர் களே வழிகாட்டிகளும் காரணரும் ஆவர். பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி, அனுதசாலை, குருடு, செவிடு, ஊமைப்பள்ளி கள், மாதர் சங்கம், இளைஞர் சங்கம், சீர்திருத்தும் நிலையங் கள் (Rescue Homes) முதலிய இன்றைய நாகரீகத்திற் கடிப்படையான எல்லா நிலையங்களும் இவர்களிடமிருந்தே

தோன்றி, பின் இதர சமயத்தாராலும் துரைத்தனத்தாலும் ஏற்கப்பட்டு வருகின்றன.

1806–ம் வருடம் ஏப்ரல் 25-ல் றிங்கல்ரேபே ஐயர் மயிலாடியில் வந்து சேர்ந்தார். 1816 மட்டும் பத்துவருட காலத்திற்குள் ஏழு சபைகளையும், ஒரு பள்ளிக்கூடத்தை யும் ஏற்படுத்தினர். அப்பள்ளி நாளடைவில் நாகர்கோவி லுக்கு மாற்றப்பட்டது. அதுவே இன்றையக் கல்லூரி யாய் வளர்ந்தது. ஆரம்ப காலத்தில் இப்பள்ளியை நடத் தின ரூபட் என்னும் மிஷனரியை அக்கால திரு விதாங்கூர் ஆசர் திருவனந்தபுரத்திற்கழைத்து, இதைப் போன்ற ஒரு தர்மப்பள்ளி நிறுவச்செய்தார். அப்பள்ளி யிலிருந்தே தற்போதைய திருவாங்கூர் பல்கலைக் கழகம் எழுந்தது. இந்தியா முழுவதும் இதுவே கதை. பாம்பே கல்கத்தா, சென்னை முதலிய மூன்று நகர்களிலும் கல்வித் துறைகளில் மிஷனரிமார் வழிகாட்டியதையே துரைத்த னத்தார் பின்பற்றினர்.

மிஷனரிமார்களேயேல், ஆங்கில அறிவு இல்லை. பிரிட்டிஷ்காரர் தங்கள் கிறிஸ்தவ ஆட்சியில் இந்தியாவுக் களித்த பொக்கிஷங்களில் முக்கியமானது ஆங்கில மொழியே. அதைப்படித்ததால் ஒரு புதிய உலகம் நமக்கு உதயமாயிற்று. விடுதலை, தன் மதிப்பு, தன்னரசு போன்ற கருத்துக்களால் இந்தியா உயர்ந்தது. ஏற்ற காலத்தில் சுயாதீனமடைந்தது. இன்றும் எத்துறையிலும் உயர்ந்தே செல்கின்றது. இவற்றிற்கெல்லாம் கருவிகளா யிருந்த பலரில் முக்கியம் வாய்ந்தவர் சீர்திருத்த கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவரேயாவர்.

உலகில் அரசியல் மாறுதல் குறித்த வரலாறு எழுதப் படுகையில், இருபதாம் நூற்றாண்டு அதிக முக்கியம் பெறும். 1947 ஆக்ஸ்டு 15-ல் இந்தியா சுயாதீனமடைந் தது. உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு தங்கி வரும் பரந்த இந்தியாவுக்கு பிரிட்டன் சுதந்தரமளித்த தென்றால் அது மிக மேம்பாடான ஒரு காரியமேயாகும். இரத்தம் சிந்துதலின்றியே இப்பெரிய மாறுதல் நடந்தது, காந்தியடிகளின் தலைமையில் நடத்தப்பட்ட மறியல் ஒத்து ழையாமை போன்ற இயக்கங்கள் ஏற்ற பயன் தரக்கார ணம் கிறிஸ்தவ மனச்சாட்சியுடைய ஒரு பிரிட்டன் அக்கா லம் இந்தியாவை ஆண்டுவந்ததால் மட்டுமே. சீர்திருத்த கிறிஸ்தவத்தை ஆதாரமாகக் கொண்ட பிரிட்டீஷாரிடத்தில் மற்றெந்த ஜனத்திலும் இல்லாத ஒரு நற்குணம் வாய்ந் திருந்தது. இன்று சுயாதீனமடைந்து வல்லமை பெற்று வளர்ந்தோங்கும். இந்தியா தனது நாட்டின் ஒரு சின்னஞ் சிறு பாகமாகிய 'கோவா' வைப்போர்த்துக்கீசியரிடமிருந்து விடுவிக்கக்கூடாதே போகின்றதைக் கவனித்தால், அதன் காரணம் சீர்திருத்தத்திருச்சபையின் குணங்கள் ஆளுவோர் மனதில் இல்லாததே காரணமாகும் என்பது தெளிவாய் விளங்கும். ஹிட்லர், ஸ்டாலின் போன்றவர் இந்தியாவை ஆண்டிருந்தால், காந்தியின் சத்தியாகிரஹம் பயனற்றதா கவே போயிருக்கும். ஆகவே இந்திய சுதந்தரத்திற்கு பிரிட்டனின் கிறிஸ்தவ மனப்பான்மையும், அன்னவரில் யாருமே துவக்கிவிட்ட (Hume) காங்கிரஸும், மிஷனரி மாரால் உண்டான ஆங்கிலமொழி மூலம் கிடைத்த புதிய அறிவும் சேர்ந்தே ஒத்துழைத்தன. உலகின் பெரிய அதிசயங்களில் இந்தியா சுதந்திரமடைந்ததும் ஒன்று.

இந்திய சீர்திருத்தச் சபையின் வளர்ச்சி ஆச்சரியப் படத்தக்கதேயாம். கடந்த சில ஆண்டுகளுக்குள் பல சபைகள் தங்கள் நூற்றாண்டு விழாக்களையும், சில தங்கள் நூற்றைம்பதாமாண்டு விழாவையும், கொண்டாடினர். அவர்கள் வளர்ச்சி மிக வியப்படையத்தக்கதேயாம்.

1956 ஆகஸ்டு 20-ல் தென்திருவிதாங்கூர் அத்திய கூஷாதீனம் தன் 150-ம் ஆண்டு விழாவைக்கொண்டாடிற்று. இவர்களின் முன்னிலை பின்வருமாறு. உயர் வகுப்பினர் என்று எண்ணினவர்களால் இவர்கள் மூன்றேர் ஒடுக்கப் பட்டவர்கள். பெண்கள் மேலாடை அணிய அனுமதிக்கப் பட்டிருந்திலர். தலைவரி, தோலவரி, மூதலிய வரிகளால் நெருக்கமடைந்திருந்தனர். நாயர் வகுப்பைச்சேர்ந்த மலையாளிகளால் அதிகமாய் இடுக்கண் அடைந்துவந்தனர். அக்காலத்தே இங்குவந்து சேர்ந்த மிஷனரிகள் உதவியால் இக்கொடுமைகளிலிருந்து தப்பிப்பிழைக்கவேண்டியும், யாவரையும் ஒன்றுபோல் மதிக்கும் கிறிஸ்துவின் அன்பை பெறவும் பெருவாரியான தமிழர் கிறிஸ்தவத்தைத் தழுவினர். கும்பல் கும்பலாய், குடும்பம் குடும்பமாய், ஊர் ஊராய், இன்றும் அவர்கள் திருச்சபையில் சேர்ந்து கொண்டேயிருக்கின்றனர். 150 ஆண்டுகளுக்குள் 480 சபைகள் எழுந்தன. 180,000 மக்கள் அதில் சேர்ந்தவர்களாய் இன்று இருக்கின்றனர். எழுத்தறிவும் படிப்பறிவும் பெற்று உயர்ந்தனர். சுறுசுறுப்பாலும், சிக்கனத்தாலும், உலக ஆஸ்திகளையும் பெற்றனர். அரசியல் துறைகளிலும் அறிவும், ஊக்கமும், அடைந்து, தமிழ்மக்கள் அனைவருக்கும் வழிகாட்டிகளாயும் விளங்கினர்.

இன்று இச்சபையில் பிரபல டாக்டர்மார், வழக்கறிஞர், ஆசிரியர், சபைத்தலைவர், வியாபாரிகள் முதலியோர்ஏராளம்.

நாகர்கோவில்

சீர்திருத்தச் சபைகளின் வளர்ச்சிக்குஎடுத்துக் காட்டாக நாகர்கோவில் சபையைச் சுட்டிக்காட்டுவோம்.

1819–ம் வருடம் ஜனுவரி முதல் தேதி நீல் என்னும் மிஷனரி மீட் துரையின் வேண்டுகோளுக்கிசைய ஒரு மனித சஞ்சாரமற்ற காட்டில் கல்கோயிலுக்கு அடிக் கல்லிட்டார். "கிழக்கே ஒரு அஞ்ஞானக்கோவில். மேற்கே ஒரு பள்ளிவாசல். இரண்டுக்குமிடையே நான் ஜீவனுள்ள தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டுகிறேன். வற்ற காலத்தில் அவ்விரண்டும் குறையவும், இது பெருகவும் கடவுள் கிருபை செய்வாராக!" என்று மீட் போதகர் தமது குறிப் புப் புத்தகத்தில் எழுதி வைத்தார். இன்று பள்ளிவாசல் இருந்த இடம் உருத்தெரியாவண்ணம் கிறிஸ்தவ வீடுகளும், தென்னை, ஒட்டு மாமரங்களும் அடங்கிய தோட்டங்களுமாய் மாறிப்போனது தெய்வச் செயலே.

1863–ம் வருஷம் இந்தச்சபை சுய ஆதரவுக்கு வரத் தக்கதாய் நேர்ந்த போது ஒரு பக்தனை தேவ ஊழியன் அதைப்பற்றி உணர்ச்சியோடு பிரசங்கிக்க அன்று கடந்த தென்னவெனில் தமது கைமோதிரத்தைக் கழற்றி மேஜை மேல் வைத்து, "இதோ! என் காணிக்கை; தங்கள் பொருள்களில் எடுத்துக் கர்த்தருக்குப் பரிசுத்தக் காணிக் கையாய்ப் படைக்க விருப்பம் உள்ளவர்கள் முன்னுக்கு வந்து தாங்கள் கொடுக்க மனம் உள்ளவைகளை மேஜை மேல் வையுங்கள்" என்று ஆவியின் ஊக்கத்தோடு கூற வும், முந்தி அவர் மனைவி எழும்பி தன் கழுத்து ஆபரணங்களில்

ஒன்றைக் கழற்றி முன்னுக்கு வந்து மேஜை மேல் வைக்க, அடுத்ததாக தாவீது கண்டக்டர் மனைவி அன்னமுத்து தன் மாலைகளில் ஒன்றை அப்படியே செய்ய, அப்பால் பெண் கல்விச்சாலை இளம்பெண் ஒருத்தி தன் காது நகைகளில் ஒன்றைக் கழற்றிப் பார்த்தும் கூடாமல் தன் உபாத்தியாயினிடம் போய் கழற்றுவித்து மேஜை மேல் வைக்க, மேஜைக்கு வலது பக்கம் இருந்த காக்ஸ் ஐயர் மகள் விசைந்து சென்று வீட்டுக்குப் போய் ஓர் தங்கப் பவுன் (15 ரூ.) எடுத்துக்கொண்டு வந்து பிரசங்கி கையில் ஒப்புவிக்க, அப்பால் பிரசங்கியும் சபையாரும் ஜெபத்துக்கு முழங்காலிடவும், ஜெபத்திலேதான் நடந்த காட்சிக்கு என்ன சொல்ல! சிலர் 'நான் இவ்வளவு கொடுக்கிறேன்', 'நான் இவ்வளவு' என்று சிறு சிறு சீட்டில் எழுதி மேஜைமேல் இட்டதுபோக, ஜனம் ஒருவர் ஒருவராய் வெளியேசென்று அவரவர் வீட்டுக்கு ஓடி, நகை என்றும், அணி என்றும், பாகை என்றும், புடவை என்றும், வெண்கல பாத்திரம் என்றும், புஸ்தகம் என்றும், பசு என்றும், குடை என்றும், பணம் என்றும் தங்கள் தங்கள் கைக்கும் மனதுக்கும் எட்டியது எல்லாம் பொறுக்கிக்கொண்டு, மீளவும் ஆலயம் சேர்ந்து, தங்கள் காணிக்கைப் பொருள்களை மேஜைமேல் குவித்தார்கள். ஆவியானவராலே சம்பூரண ஜெபமும், ஸ்தோத்திரமும் செய்து கர்த்தருக்குள் மகிழ்ச்சி அடைந்து கூட்டம் கலைந்து வீட்டுக்குத் திரும்பினர்கள்....."

1952 பெப்ருவரி மூன்றும் தேதி ஞாயிறு காலை ஆராதனையில் மேலே கூறியுள்ள வரலாற்றை நாகர்கோவில் சபையாருக்குப் படித்துக்காட்டி அவசியமான கூரைப்

முழுபார்ப்புக்குரிய நிதி திரட்ட எண்ணின சபைப்போத
கரும் இதே முறையில் உற்சாகமடைந்த வாலாறையும் அவ்
வருட ஆண்டறிக்கையினின்று பெயர்த்தெழுதுகிறேன்.

"இதைப்போல இக்காலத்திலும் ஆண்டவர் தமது கிரி
யையை நடப்பித்துக்கொண்டிருக்கிறார் என்பதற்கு ஐய
மில்லை. அன்று நான் ஆராதனை முடித்து அந்தப்புறம்
போகவே மிஸிஸ் எதல்பால் என்னும் மிதலைச் சகோதரி
ரூ. 500 ஐ எனது கையில் கொடுத்தனர்.
திரு. ஆசீர்வாதம் பாகவதரின் மகன் ஏ. சாம் ஈபநேசர்
தன் கை மோதிரத்தைக் கழற்றி என் கையில் தர
வும், அவ்வேளையில்தானே திரு. ஜேசுதாஸ் ஆசிரியர் மகன்
ஹென்றி தனராஜ் மோதிரம் ஒன்றையும் கழற்றித் தந்து
ரூ. 500-ம் தருவதாக வாக்களிக்கவும், மறுநாள் திங்கள்
ஒரு அம்மாள் தன் கல் வைத்த மோதிரமொன்றை எனக்கு
அனுப்பிவைத்தும், 5-ம் தெய்தி செவ்வாய் இரவு சபை
கமிற்றி ஆத்திரமாய்க் கூடி ஒவ்வொருவரும் ரூ 100, 200,
300 என்று ஐந்தே நிமிஷத்தில் ரூ. 1,700 வாக்களிக்கவும்,
10-ம் தெய்தி மறு ஞாயிறு காலை ஆராதனைக்குப்பின்
சபைக்கு இவற்றையெல்லாம் விளக்கிக் கூற
வே அச்சணமே மூன்று பேர் ரூ. 400 வாக்களிக்கவும் 11-ம்
தேதி முதல் சபை கமிற்றிமார் வீடுகள் தோறும் சென்று
ஒப்பந்த சீட்டுகளைக் கொடுத்து வருவதின் பயனாக பலரும்
பல தொகைகள்கொடுக்க வாக்களிக்கவும் ஆண்டவர் கிரியை
நடப்பித்து வருவதை நினைத்து உளமகிழ்ச்சியோடு இச்
செய்தியை உங்களுக்கு அறிவிக்க முன் வந்துள்ளேன்.
ஆகையால் நீங்கள் ஏகோபித்து எழும்பி அவரவர் தங்கள்
தங்கள் தகுதிக்குத் தக்கதாய் ஒவ்வொருவரும் தம் தம் கட

மைகளே செவ்வனேச் செய்து இந்த பாக்கியமான ஊழியத்தில் மனப்பூர்வமாய் பங்குக்கொள்வீர்களென்று கர்த்தருக்குள் கம்புகிறேன். இந்த நல் விருப்பம் கர்த்தரால் நமக்கு உண்டானதுபோல இதைச்செய்து முடிக்கவேண்டிய எல்லா வசதிகளையும் அவர்தாமே அளித்து காப்பாராக."

லண்டன் மிஷன் வேலை ஆரம்பித்து 60–ம் ஆண்டில் 1866 பெப்ருவரி 13-ல் முதன்முதலாய் நான்கு இந்தியர்கள் குருத்துவ ஊழியத்திற்கு உயர்த்தப்பட்டனர். ஒருவர் பெரிய நாட்டையார் என்று அறியப்பட்டு வந்த சங். C. ஏசுவடியான் போதகர்; பலமொழிக் கலைஞர். ஈலகண்டன் தேவதாசன் என்னும் பிராமண நாட்டு ஐயர் இச்சபையின் முதற்குருவாய்ப் பணியாற்றினவர். திருச்சபைச் சரித்திரம் எழுதின சங். சகரியா ஐயர் இன்னொருவர். முதற் கிறிஸ்தவரான வேதமாணிக்கம் மகா ராசன் குடும்பத்தாரான சங். மாசிலாமணி ஐயர் நாலாம் ஆள்.

ஆளில்லா இடத்தில் கட்டப்பட்ட இக்கோயில் இன்று இடங்கொள்ளாவண்ணம் 6000 கிறிஸ்தவ மக்களுக்கு இடம் கொடுத்து வருகிறது. இதைச் சேர்ந்த சிறு பள்ளி உயர் தரப்பள்ளியாகி 1893-ம் வருடம் Intermediate College ஆனது. 1950 வருஷம் பி. ஏ. வகுப்புகள் அமைந்தன. இன்று கணிதம், வரலாறு, பொருளாதாரம், இரசாயணம், வேதிநூல், மிருகநூல், தாவரநூல் போன்ற எல்லாப் பிரிவுகளும் கற்றுக்கொடுக்கப்படுவதுடன் அதற்கேற்ற விஞ்ஞையுயர்ந்த நுட்பமான ஆய்சாலைகளும் அமைக்கப்பட்டு 1200 மாணவர்களுடைய முதல்தரமான முதல் வகுப்புக் (First rate first grade college) கல்லூரியாய் விளங்குகின்றது.

மூதல் மிஷனரிமாரால் பெண்கள் மத்தியில் தையல், பின்னல் முதலிய தொழில்களை ஏற்படுத்தவே, இவர்கள் அதிகச் சுத்தமாய் அவற்றைச் செய்து பழகி, தங்கள் பிள்ளை களுக்கும் ஒரு காலத்தில் அழகிய உடைகள் தைத்துக் கொடுக்க ஆவல் கொண்டு, தாங்கள் தைக்கும் புதிய புதிய ரவுக்கை, ஜாக்கற்று முதலியவைகளை அணியப்பழகி படிப்படியாக நாகரீக உடை அணியவும் கற்று, தோற்றத் திலும் மாறுதலடையலாயினர். இவ்வாறே பிற இடங்களி லும் என்க.

சீர்திருத்தச் சபை மிஷன்கள் இந்தியாவின் பற்பல பாகங்களில் உழைத்த போதிலும் எங்கும் ஒன்றுபோல் வெற்றிபெற வில்லை. கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள விஜய வாடாவில் 1840 வருடம் ஒரு திருவிழா நடந்தது. கூட் டத்தில் பாகொல வெங்கய்யா என்னும் திருடர் தலைவன் ஒருவன் தற்செயலாய்ச் சென்று கோவில் பூசாரியிடம் 'என் பாவம்தீர வழியென்ன' என்று கேட்டான். அப்பொழுது சுவிசேஷப்பிரசங்கம்செய்து பக்கத்திலுள்ள குன்றின் மேலி ருந்த பங்களாவில் இளைப்பாறிக்கொண்டிருந்த ஐரோப்பிய மிஷனரி யொருவரிடம் சென்று விசாரி, என்று கேலியாய்ப் பிராமணன் பதிலுரைத்தான். வெங்கய்யா மிஷனரியிடம் செல்ல, அவர் அவனுக்கு ஜீவ வழியைக்குறித்துப்போதித் தார். அவன் ஞானஸ்நானம் பெற்று தன் இனத்தார் பலரை கிறிஸ்தவர்களாக்கினன். தற்போது கிருஷ்ணா அத்திய க்ஷேத்திரத்தின் 75000 கிறிஸ்தவர் பெரும்பாகமான அங் கத்தினர் அவன் இனத்தாரே.

ஆசாம் மலைத்தொடர்களிலுள்ள நாகர் மலைவாசிகளின் மத்தியில் சுவிசேஷம் புகுந்து அதிக ஆண்டுகளாகவில்லை. தலைவேட்டையாடும் நாகர்கள், கிறிஸ்துவுக்கென்று ஆத்தும ஆதாயம் பண்ணுகிறவர்களாய் மாறிவிட்டனர். நிர்வாணிகளாய் நடந்த காலத்தில் அவர்களைப் பற்றி மணிமேகலையிலும் 'நக்க நாகர்' என்று கூறியகாலம் மறைந்துபோனது. அச்சபை வளருவது விஷேச மிஷனரிகளாலன்று. நாகர்களே தங்கள் இனத்தாருக்குள் சுவிசேஷத்தைப் பரப்பி வருகின்றனர். அவர்களுக்குள் பற்பல பிரிவாருண்டு. சில பிரிவாரில் பாதிக்குமேல் கிறிஸ்து சபையைச் சேர்ந்தவர்களாகிவிட்டனர். 1955-ல் பக்தி முயற்சி சங்கத்தின் அங்கத்தினராகிய பதினெருவாலிபர் இந்திய முழுவதும் சபைகளைச் சுற்றி வந்தனர். அவர்கள் தென் கடைகோடியிலிருக்கும் நாகர்கோவிலுக்கும் வந்து திரும்பினர். தங்கள் சாட்சிகளைக் கூறுகையில், மக்களை மறுரூபப்படுத்துகிற கிறிஸ்துவின் வல்லமையை உணர்ந்தார்கள்.

பீகார் மாகாணத்தின் மலையுச்சிகளில் தங்கும் முண்டர் மத்தியில் கடந்த நூருண்டுக்குள் கிறிஸ்தவம் பரம்பி உறுதியான சபையை நிலைநிறுத்தக்காரணமாயிற்று. குருத்தவ ஊழியத்தில் தேறிய முண்டாக் கிறிஸ்தவதலைவர் இன்று பலர். இதே காலத்தில் மத்திய மாகாணத்தில் கொண்டவர்கள் மத்தியில் துவக்கின ஊழியம் நூருண்டுக்குப் பின்னும் வளராச் சபையாகவே போயிற்று.

அதிகாரம் 4

வெற்றியும் தோல்வியும்

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். விதைகள் நான்கு விதமான நிலங்களில் விழுந்தன. பலன் நாலு தரமானதே. விதை ஒன்றே. விதைத்தவனும் ஒருவனே. கனியே பலவாறு. குறை மண்ணைச் சேர்ந்தது போலும்.

மத்திய மாகாணத்தின் சாத்பூரா மலைத்தொடர்புகளில் கொண்டர் Gonds முப்பது லக்ஷம்உண்டு. 1842–ம் வருடம் இவர்கள் மத்தியில் தகுந்த முன்கருதல் இல்லாது சுவிசேஷம் தழைக்கச்சென்ற ஆறு ஜர்மனியரில் நாலுபேர் ஒரே வாரத்தில் விஷபேதியினால் இறந்து போயினர். இன்னொருவரும் சிலமாதங்களுக்குப்பின் இறந்தார். இறந்த கதையைச் சொல்ல ஒருவரே மீந்தார். அவர்களை அடக்கம் செய்வதற்காய் மீந்த அவர்கள் பொருட்கள் அனைத்தையும் கொடுத்துக் குழி தோண்டச்செய்தனர். 'இங்கள் வரைக்கும் இருக்கிற கற்குவியலை நாட்டினர்கள்' என்றவண்ணம் கல்குவியல் ஒன்றுமட்டும் மீந்தது. இது நருபதை ஆற்றின் ஊற்றிடமாகிய அமர்கண்டத்திற்கு பதினெட்டு மைலுக்கிப்புறம் இருக்கும் காஞ்சியா என்ற சிற்றூர்.

கொண்டர் மத்தியில் (1941–50) ஒன்பதாண்டுகள் தங்கி யுழைத்த காலத்து, இவ்விடத்தை நானே சென்று பார்த்து, அந்த வீரரின் விசுவாசத்திற்காய் கடவுளைத் துதித்தேன். பின் C. M. S. சங்கம் 1880–ல் இங்கு வந்து, 60 ஆண்டு கள் உழைத்து, பலனில்லாமையால் வேலையை இந்தியர் வச மளித்து விட்டுப்போயிற்று. இந்தியர்கள் கடந்த 15 ஆண்டு களாய் அங்கு உழைத்த போதிலும் சபை சிறுகியே வரு கிறது.

இதற்குக்காரணம் மண் வேறுபாடே. காட்டு மக்க ளான மூண்டர், நாகர் மத்தியில கிறிஸ்தவம் தழைத் திருக்க, கொண்டர் மத்தியில் மட்டும் குன்றிடக் காரணம் வேறு? மூண்டர் கலியாணம் செய்கையில் பெண் கணவனுக் கொரு கோடரியைக் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிற தாம். 'உமக்கு உண்மைக்கேடாய் நான் நடந்தால் நீ இக் கோடரியால் என் தலையைத் துண்டுபண்ணக்கடவாய்' என்று கூறுவதுபோல் இச்சடங்கு இருக்கிறது. மூண்டர் பெண்கள் பூரண பதிவிரதைகளென்பது இதன் பொரு ளல்ல எனினும் கறபு, ஒரு தாரம் என்பவற்றைப்பற்றிய உயரிய கருத்து, அச்சனத்தில் அமாந்தே இருப்பதற்கு இது ஒரு அத்தாட்சி. சபை அங்கு தழைக்கிறது.

இதற்கு மாறாக கொண்டர் திருமண வாழ்க்கை வேறு தமானதே. கிழவன் கிழத்தியைக் காட்டில் காண, கண் ணால் இருவர்தம் கருத்தை வெளியிட, இருவரும் தப்பிக் காட்டில் சென்று, யாரும் அறியாதொரு நாள்க்கழிக்க, உற் றார் அவரைத் தேடிச்சென்று, ஊரார் அறியப்பெரும் பறை சாற்றி, முருங்கைக் காலில் நெய் விளக்கேற்றி, கணவன்

மனிஷியின் கையைப் பிடித்து, யாவரும் காண ஏழுமுறை சுற்றி, இருவர் முந்தியும் ஒருங்கே இணைத்து, வளையல் பலபல காங்களிலணிந்து, ஊனும் கள்ளும் ஒருங்கேயுண்டு, கொண்டார் செய்யும் மணமுறைகளைப் பல முறை யான் கண்டிருந்த போதிலும், இந்த அலங்கார மணம் சிறிதொரு நாட்களில் சின்னபின்னமாகிப் போவதையும் கண்டு வியப் படைந்திருக்கிறேன். (One at a time) ஒரே வேளையில் ஒரே மனிஷி என்பது கொண்டார் பழக்கம். பழந் துணி களை களைந்து மாற்றுவதுபோல், தலைவன் தலைவியையும் தலைவி தலைவனையும் விட்டு விடுவர். விட்டு விட்டவர்களை சேர்த்துக் கொள்ளுகிறவன் ஊருக்குப் புறம்பாக்கப்படு வான். ஊனும், கள்ளும், கலந்த விருந்தைத் தண்டனை யென ஊராருக்குக் கொடுத்தால் அக்குற்றம் நீங்கும் இதுவே பொதுமுறை. இந்த ஜனத்தில் கிறிஸ்தவம் தழைப்பதெப்படி? ஏற்ற காலத்தில் மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தம் கேட்கும் காலம் வருமென்றபடி கால இறுதியில் இவர்களும் மேல் எழுவர். அல்லது கிறிஸ்தவம் வீணே. பாவிகளை இரட்சிக்கவே வந்தார் இயேசுநாதர்.

சிலம்பம், வைத்தியம், வர்ம சாஸ்திரம் முதலிய கலைகளை குலக்குணங்களாய்க் கொண்ட மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் தழைப்பதையும், பலதாசம், சோம்பல், கற்புக் குறைதல் இவைபோன்ற குணங்களைக் கொண் டோர் மத்தியில் கிறிஸ்தவம் வேர்கொள்ளாமையும் உற்றறி வோர் எளிதில் கண்டுகொள்வர்.

Depressed classes oppressed classes கீழ் மக் கள் தடுக்கப்பட்டோர் இவர்கள் வெவ்வேறு மக்களாவர். உயரிய குணங்களற்ற இழிவான மனப்பான்மையுடைய

குலங்களும் உண்டே. 'இடாதார் இழிகுலத்தோர்' என ஔவைப்பாட்டியும் வகுத்துக் கூறினளே. சுட்டாலும் பால் சுவையிற் குன்று, தென்றபடி ஏழையாயினும் உயர் குணமுடையோன் உயர்ந்தே தீருவான். ஒடுக்கப்பட்டவன் மீது சுமந்த ஒடுக்கம் உயர்த்தப்படுகையில், 'நீரினுள் குமிழிபோல' அவன் மேலேயே எழுவான். உயர்ந்திருக்க இயலாத தாழ்மக்கள், என்றும் தாழ்மக்களே. இது பொது விதி. விதி விலக்குப்போல் ஆங்காங்கே இதற்கு மாறான நிலையும் எழுதல்கூடும். ஆயினும் பொது விதி பெரும்பாலும் உண்மையே.

திருநெல்வேலி நாட்டில் சுவிசேஷம் கூறினோர் வேளாளர், மறவர், குடும்பர், சாம்பவர், சான்றோர் முதலிய பல வகுப்பாருக்கும் ஒரே சிலாக்கியங்களை அளித்த போதிலும் ஒரு குலத்தாரே உறுதியாய் நிற்கலாயினர். அவர்களே இன்று உயர்ந்தும் நிற்கின்றனர். விரலுக்கேற்கவே வீக்கம் என்றபடி ஒரு குலத்தார் நூறாண்டளவில் எத்தனை பிழையும் எவருக்கும் சமமாய் எழக்கூடியவராயினர். இவர்கள் எல்லாராலும் பகைக்கப்பட்டவர். பகைக்கப்படுகிறவர். ஒரு காலம் இவர்கள் யாவரும் புத்தமதத்தைத் தழுவியிருந்ததாகக் கூறுவாருமுண்டு. அதிலேயே மற்றெல்லாரும் இவர்களுக்கெதிராய் சூழ்ச்சி செய்கின்றனர்போலும். கிறிஸ்தவம் இவர்களில் பலன் கொள்ளுவதில் ஆச்சரியப்படத்தேவையில்லை.

இந்திய மக்களை ஆரியர், திராவிடர், என இரு பிரிவாகக் கூறுவர். இன்றுத் தனி ஆரியர் என்பார் ஒரு சிலர் மட்டுமே. 5000 ஆண்டுகளுக்கு முன் இந்தியா முழுவதிலும் திராவிடரே (தமிழரே) பரவியிருந்தனர். ஒரு சிலராய் மட்டும் வந்துகொண்டேயிருந்த ஆரியர் இவர்களைத்

தமது வலக்காரத்தாலும் பிரித்தாட்சி முறையாலும் மேற் கொண்டனர். தங்கள் வடமொழியை உயர்ந்ததெனக்கூறி தென் மொழிக்குள் அச்சொற்களைப் புகுத்தி, மொழியைப் பிரித்து, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், என அவர்களே ஒப்புக்கொண்ட பஞ்ச திராவிட மொழிகளை நாலாய்ப்பிரித்து, மக்களைப் பிரித்தனர். தமிழ்மொழியாலே தம் மொழிக்கு வலிவூட்டி தமிழ்க் கலைகளையே திருடியும், மறைத்தும், கிரித்தும், மொழி பெயர்த்தும், தங்களுக்காக இன பின் இவற்றையே புதுப்புது வடிவத்தில் அறிவி யர் நடுவில் கூறியும் வந்தனர். இது மொழி நூலுக்குரிய பொருளாதலால் இங்கு கூறுதே விடுத்தோம்.

ஆரிய, திராவிட வேற்றுமைகளை அறிதல் பயன் தரும். ஆரியர் மண பாங்கில் உயர்மறை நூல்களில் கடவுளை ஆள் தன்மையில்லதாய்க்கூறுவர். தமிழர் கடந்த உள்ளம் படைத் தவரே கடவுள் என்பர். கடவுளைத் தந்தை எனக்கூறுவது தமிழரியல்பு. பழனிமலையப்பன், சவரிமலையப்பன் வைக்கத் தப்பன் என்றதால் மனுக்குலத்திற்குக் கடவுள் தந்தையா கின்றனர். கடவுள் தந்தையாலல் மனிதர் எவரும் அண் ணன், தம்பியேயாம். சாதிப்பிரிவினைக்கு இடமேயில்லை. சாதி ஆரியன் வகுத்தது. சாதி என்னும் சொல்லே வட மொழியாகும். மிகத்திருந்திய தமிழ்மொழியில் சாதிக்குத் தமிழ்ச்சொல் கிடைத்தில தென்பதால் அதினின்று நாம் கருதவேண்டியது 'சாதி' தமிழனுக்கன்னியமானதே என்ற மூடிபே. மேல் கீழ் என்ற (வர்ணச்சிர தர்மம்) நாலு சாதிப்பிரிவினை தமிழனுக்கன்னியமானதே. திராவிட மக்களில் பெண்கள் வீட்டில் மிக வலிமை செலுத்துவோர் ஆவர்! இல்லத்திற்கதிகாரியே இல்லாள். திருமணம் என்ற

சொல்லுக்குள்ளேயே பெண் மனம் கொண்டதால், கூடி வாழும் அன்பு நிலை என்னும் கருத்தடங்கும். விதவை மீணடும் கூடிவாழத் தெரிந்து கொள்வதற்கு தெலுங்கில் மணமு கொள்ளுதல் என்று பெயர். ஆரியரின் கன்னிகா தானமும் அல்ல, பாணிக்கிரகணமும் பண்ணுவது (பாணி = கை — பிடித்தல்) அல்ல தமிழன் திருமணம். வாழை பேரல் வாழுவது வாழ்க்கையரம். இவ்வுலகத்தை மாயை என்றழைப்பர் ஆரியர். சம்சாரம் என்றதால் தப்பிப் பிழைக்கவேண்டிய கண்ணி யென்றெண்ணினர் ஆரியர். ஆரியர் இறந்தோரைச் சுட்டுச்சம்பலாக்குவர். திராவிடரோ பெரு மரியரதையுடன் தாழிகளிலும், மண்குழியிலும் மறைவு செய்வர். அங்கிருந்து மறுபடியும் எழுவரோ என்ற ஐயம் அவருக்கிருந்ததுபோலும்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு" குறள்

இவை விரிக்கில் மிக விரியும்.

கடவுளைப் பிதாவாகவும் மனுகுலத்தை அவர் மக்களாக வும் மரணத்தை உறக்கமாகவும்கொண்ட திராவிடர் மத்தியில் கிறிஸ்தவம் தழைக்குமே தவிர ஆரிய மண்ணில் கிறிஸ்தவ வித்து முளைப்பதும் வளர்ந்து கனிகொடுப்பதும் எளிதன்று. மிஷனறிகள் இதை ஊன்றிப்படிக்கவும்.

அதிகாரம் 5

சாதியும் சபையும்

கிறிஸ்தவம் தழைத்து நிற்குமிடமெங்கும் சபைகளே உற்று நோக்கின் சிற்சில குணங்கள் தெற்றென விளங்கும். அவற்றில் முக்கியமானது கிறிஸ்தவரான பின்னும் இந்தியர் தங்கள் ஜாதிக்கட்டுப்பாடுகளினின்றும் முற்றிலும் விடுதலை பெறுததே. சிலர் தங்கள் பெயர்களுடன் ஜோசப் றெட்டி, ஆசீர்வாத நாடார், சாமுவேல் பிள்ளை, தியாப்பிலஸ் கௌண்டர், பிரகாசமுவ்வர் என்றிவ்வாறு ஜாதிப் பெயரையும் சேர்த்துக்கொள்ளுகின்றனர். இது கிறிஸ்தவமல்ல என்று மேடைகளில் பறை சாற்றினும், பத்திரிகைகளில் எழுதினும் மகாநாடுகளில் வாதாடினும் இந்த 'ஜாதிப்பிசாசு' ஒழிந்தபாடில்லை. இதை ஒழிக்க முயல்வோரும் அரைமனதுடன் உழைக்கின்றனரோ என்று சந்தேகப்படவேண்டியதிருக்கின்றது. தம் காலத்தில் இலக்கியவாதிகளாய் கலப்பு மணம் செய்த பல தலைவர்கள்கூட பிற்காலங்களில் தங்கள் பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை வாசதையைக் கண்டு கலங்கித் திகைத்துப்போகின்றது மட்டுமல்ல கூடியமட்டும் தங்கள் ஜாதியிலேயே துணைதேடி வைக்கவும் ஊக்கமாய் முயல்கின்றனர். அவர்கள் முயற்சியைப் பலமாய்க் கண்டிக்கவும் நாம் அஞ்சுகின்றோம்.

சாதியென்பது ஆரியன் நாவிடனே மேற்கொள்ள வருத்த வலங்காரமென முன்னே கூறினோம். மனிதன்

பழக்கத்தால் படிப்பவராகையால் பழமையான காரியங்களை உதறித்தள்ள வலிமையற்றவனுய்ப் போகின்றன். பழமையை முற்றிலும் உதறித்தள்ளிப் புதுமையை நிலைநாட்ட விரும்புவோரே புரட்சிக்காரராகின்றனர். ருஷியா புரட்சியால் முன்னேற முயலும் நாடு. அதன் வெற்றியை முற்றிலும் மதிப்பிடும் காலம் இன்னும் வரவில்லை. மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்தினும் தன் மனுஷீகத்தை நஷ்டப்படுத்தினுல் அவனுக்கு லாபமென்ன என்னும்கேள்வி ருஷியாவுக்கெதிரே எழுந்து ஓங்கி பாம்பு படமெடுத்தாடினுற்போல் அசைவாடி வருகின்றது.

பழையதை முற்றிலும் அழிக்காமல் அவற்றில் நன்மையானவற்றைப் பாதுகாத்துப் பிறவற்றைத் திருத்தியமைத்து யாவற்றையும் புதுப்பித்தலே சீர்திருத்தமாகும். மங்கி எரிகிற திரியை அவியாமலும், நெரிந்த நாணலை முறியாமலும் இயேசுநாதரே உழைத்துத்தம் உயிரையும் கொடுத்திருக்க அவரைப் பின்பற்றுவோர் வேறு முறையைக் கைக்கொள்ளுவானேன்? ஒழிக்க அல்ல நிறைவேற்றவே வந்தேன் என்றுரே.

அப்படியாயின் நெடுங்காலமாய் நம் நாட்டில் நிலைகொண்டதும் மிக வலுத்ததுமான சாதியை ஒரு நொடிப் பொழுதில் கிறிஸ்தவத்தால் குலைத்துவிடலாம் என்பது துணிபே தவிர ஞானமாகாது. சாதியின் வலிமை இன்னதென்றுணரவேண்டுமாயின் இந்துமார்க்கம் என்றல் என்ன என்பதை அறிதல் வேண்டும். கடவுளே கிறிஸ்து. மனிதனைப் பாவத்தினின்று மீட்க, அவரே மனித உடல் எடுத்துச், சிலுவையில் தமது உயிரைக் கொடுத்து, அதை மறுபடியும் எடுத்து, இதை நம்பித் தம்மைப் பற்றிக்கொள்

வோரைத் திருச்சபையென்னும் புதிய கூட்டுறவுக்குள் ளாக்கி இச்சபையைக் கொண்டு உலகை மீட்பதே கிறிஸ்து மார்க்கத்தின் மொத்த முடிவாம். கடவுள் ஒருவரே. அவர் பெரியவர். அவருடைய சபியும் ஒருவரே, அவரே முகம மது. இதை நம்புவோரே முஸ்லீம்களாவார். இந்துக்கள் யார் என்றால் விடைபகருவது எளிதல்ல. விக்கிரக வணக் கமில்லாமலும் இந்து மார்க்கம் நிலைக்கும். கோயிலின்றி யும் தொழுதல் கூடும். ஒரு தெய்வ வணக்கமும், பல தெய்வ வணக்கமும் அதிலுண்டு. பேய் பிசாசு, மந்திரம் தந்திரம் யாவற்றையும் நம்புவோரும் இந்துக்களே. நம்பா தவரும் அவரே. சாதிக்கட்டை எடுத்துவிட்டால் இந்து மார்க்கம் நிலையாது. சாதிப் பிரிவினையே இந்து மார்க்கத் தின் சாராம்சம். மதத்தின் ஆணிவேர் போன்றது அதுவே. இது அன்னவரே ஒத்துக்கொள்ளும் உண்மையாகும். இந்த உண்மையைக் கண்ட புத்தமார்க்கம் ஓரளவு வலிமை கொண்டபோதிலும் முடிவில் காடுகடத்தப்பட்டது. பிரா மணியம் பௌத்தத்தை விழுங்கியது. எக்கொள்கையை யும் விழுங்கும் இயல்புடையதே இந்து மார்க்கமாகும். அது கிறிஸ்தவத்தையும் விழுங்க முயல்கின்றது. சாதி இல்லை யேல் இந்து மார்க்கமே இல்லை. இது உண்மை! உண்மை!! உண்மை!!!

. இயேசுநாதர் காலத்தில் அடிமைவாணிபம் நடந்துவந் தது. யூதர் தங்களை வீட்டுப் பிள்ளைகளெனவும் பிறரை வீட்டு நாய்க்குட்டிகளெனவும் நினைத்தனர். சுயிசேஷங் களிலோ, நிருபங்களிலோ இது கொடிது, கவறு, ஆகை யால் இதை ஒழிக்கவேண்டும் என்ற பகிரங்க ஆலோசனை கள் எதுவும் காணோம். வேலைக்காரரே உங்கள் எஜமான்

களுக்கு ஊழியஞ் செய்யுங்கள் என்றே பவுலடிகளும் ஆலோசனை பகருகின்றார். கொலோ. 3:22.

ஆயினும் அடிமைத்தனத்தை ஒழித்துக்கட்டும் வித்து கிறிஸ்துவின் நற்செய்திக்குள் அடங்கியிருந்தது. அது மூளைக்க நெடுங்காலம் பிடித்தது. இரண்டு மாதத்தில் அழியும் பயறு இரண்டே நாளில் மூளைக்கும். மூன்னூறு ஆண்டு வாழும் தேயிலைச்செடியின் வித்து மூளைக்க நாற்பதுநாள் செல்லும். பனங்கொட்டை மூளைக்க மூன்று மாதம் பிடிக்கும். கி. பி. 1800-ம் ஆண்டிற்குப்பின் அடிமை வாணிபம் சட்டம் மூலம் ஒழிக்கப்பட்டது. கிறிஸ்தவத்தின் கனியே அது.

அப்படியாயின் 'சாதிப்பேய்' ஒழிய ஆத்திரப்படுதல் பயனற்றதாம். இந்திய கிறிஸ்தவம் சாதி அடிப்படையிலேயே பரவி மேலெழுந்தது. இது இயற்கையே. இயேசு நாதரைப் பின் சென்ற அந்திரேயா, யோவான் என்ற இருவரும் அவருடன் ஒரு இராத்தங்கி எழுந்துபோகவே அவர்களில் ஒருவராகிய அந்திரேயா முதலாவது தன் சகோதரன் பேதுருவைக் கண்டுபிடித்து, அவரிடம் மேசியாவைக் கண்டுகொண்டோம் என விளம்பி நற்செய்தியைப் பரப்பினாரே. யோ. 1:41. அவ்விதமே புத்தி தடுமாறி அலைந்த கதரேன் நாட்டு லேகியோனும் குணமடைந்த பின் 'நீ உன் இனத்தாரிடத்திற்குப் போய் உன் வீட்டாருக்கு அறிவி' என்றே கட்டளைபெற்றான். அதுவே முறை.

இந்திய திருச்சபைகளில் வளர்ந்து பரவிச் செல்லும் சபை அணைத்தும் வள்ளிக் கிழங்குபோல் தொடர்பு கொண்டேசெல்லும். குலம் குலமாகவும் சாதி சாதியாகவுமே கிறிஸ்தவம் பரவிற்று. பரவுகிறது. பலர் இதைத் தடுக்

கக்கூடும். கொண்டர் மத்தியில் கிறிஸ்தவம் பரம்பாத திற்கு ஒரு காரணத்தை முன் கூறினேம். இன்னொரு காரணம், முதல் மிஷனரிமார் சென்றதும், காலறு நோயினால் அனுதைகளாய்ப்போன சில சிறுவர் சிறுமிகளை எடுத்து அவர்களை ஞானஸ்னனப்படுத்தி, அவர்களுக்கு எழுத்தறி வூட்டி சபையை ஆரம்பித்தனர். கொண்டர் மொழிக்கு எழுத்தில்லை யாதலாலும், காட்டிலே (பள்ளிக்கூடமில்லாத யிடம்) அவர்கள் தங்கியிருந்தபடியாலும் அவர்கள் அறிவு மிகக்குறைவே. எனினும் அவர்கள் இனப்பற்று மிகப் பெரிது. இதர மக்கள் எல்லாரும் தங்களுக்குக் கீழ்ப்பட்ட வர்களே என்பது அவர்கள் துணிபு. பிராமணரிடமிருந் தகூட அவர்கள் நீர் பருகார்.

இதையுணராத மிஷனரிமார் இடைத்தவர்களைச் சேர்த் துக் கலப்பு மணம் செய்வித்துச் சபைகாட்ட முயன்றனர். மூடிவு தோல்வியே. குன்றிக்குன்றிப் பெற்றுப்பெருகும் சபையாகினர். மூண்டர்கள் மத்தியில் உழைத்தவர்கள் இந் நிலையை அறிந்தோர்போல ஒரே வகுப்பினரிடத்தில் உழைத் தனர். சபையும் வலுத்தது. சாதியடிப்பாட்டில் சபை வளருவதற்குத் தென் திருவாங்கூர் சிறந்த ஒரு காட்டு ஆகும். ஒரே குடும்பத்தில் பாதிபேர் இந்துக்களும் மற்ற வர் கிறிஸ்தவரும் ஆயினும் திருமணம், மரணம், பிறப்பு முதலிய காலங்களில் ஒருவரையொருவர் வினவிக் கலந்து கொள்வர். காலடைவில் கிறிஸ்தவத்தின் அழகு மற்றவர் களை அதற்குள் இழுக்கும். இத்தகாடர்பற்று மிஷன் வளாகத்துக்குள் ஓடியொளித்து வந்த சபைகள் வளராதே போயிற்று.

ஐம்பதாண்டுகளுக்குமுன் மிஷனறிமார் கத்திரிக்கோலும் கொண்டே ஞானஸ்நானம் கடத்தவர். மூடி வளர்த்த ஆண்கள் தலையை மொட்டையடித்த பின்னரே ஞானதீக்ஷை அவர்களுக்கு அளிப்பர். இக்காரணம் ஒன்றினிமித்தமே சபைக்குள் சேர மறுத்தவர்களுமிருந்தனர். என்றாலும் ஆண்கள் மத்தியில் கல்வி, சுகாதாரம் இவை பெருகவே மிஷனறிமார் கத்திரிக்கோல் இல்லாமலே, கிராம மக்களும் தாமாகவே இக்காலம் தங்கள் தலைகளை மொட்டையடித்துக்கொள்கின்றனர். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல மற்றவர்களும் வசதியைக்கருதி 'கிராப்' செய்து கொள்கின்றனரே. இதற்கும் கிறிஸ்தவத்திற்கும் தொடர்பு எதுவும் இல்லை. இருக்கத்தேவையுமில்லை.

மலையாளம்போல நீர்வளம், நிலவளம் பொருந்தி மலைகளால் சூழப்பட்டிருக்குமிடங்களில் மரங்கள் உயரமாய் வளரும். பரந்த வெளிகளும், மழைத்தாழ்ச்சியும், சூறை வளிக்காற்றும் மிகுந்த இடங்களில் இதே மரங்கள் குறுகியும் பருமனையும் வளரும். மழை மிகுந்த மலைகளில் பூக்கள் மணம் குறையும். வெயில் வெளிகளான கீழ்நாட்டில் அதே பூக்கள் மணம் கமழும். இந்த இயற்கை வேற்றுமையைக் கண்டு வியப்படையத் தேவையில்லை. கிறிஸ்தவமும் அப்படியே. சாதிப்பிரிவினை நிறைந்த நாடுகளில் குலங்குலமாகவே கிறிஸ்தவத்தைப்பரப்புதல் வேண்டும். சாதிப்பிரிவினை இல்லா மேனாடுகளிலிருந்து வந்த மிஷனறிமார் இதையறியாது, தம்நாடுபோலவே இந்தியாவுமிருக்கவேண்டுமென்று ஆத்திரம் கொண்டதாலே சிற்சில இட, புதுக்கிறிஸ்தவர்களை ஒன்றாய் இணைத்து ஒரு புதுச்சாதியாக்கினர். இதைச்செய்வதில் எங்கே வெற்றிபெற்றனரோ அங்கே சபை வளர்ச்சி

யும் குன்றிற்று. வடஇந்தியாவின் மிஷன்கள் பெருவாரியும் இதற்கு அத்தாட்சி. தென்னாட்டில் சிறியன் சபையையும், கோழிக்கோடுப் பிராந்தியங்களிலுள்ள பேசல் மிஷன் என்று அறியப்பட்டிருந்து தற்போது தென்னிந்திய சபையின் ஒரு பகுதியான வடகேரளத்தையும், கூர்ந்து கவனிக்கவும். இந்த உண்மையை மேனாட்டார் எளிதில் உணர்வதில்லை. இந்திய கிறிஸ்தவத் தலைவர்களும் உற்று ஆராயாமல் மேனாட்டார் கூறினதையே கூறித்திரிவர்.

இந்திய சபைத்தலைவர்களில் காலஞ்சென்ற ம. க. பிஷப் அசரியா மிகச்சிறந்தவர். அவர் பிஷப்பாகவிருந்த தோர்ணக்கல் அத்தியகூஷா தீனத்தில் இரண்டரை லக்ஷம் கிறிஸ்தவர்கள் இருந்தனர். பெரும்பாலும் இவர்கள் மாலா மாதிகா என்னும் இரு வகுப்பைச் சேர்ந்தவர். மாலா, சபைகள் சில வேளைகளில் மாதிகா போதகன்மாரை ஏற்றுக் கொள்வதில்லை, அப்படிப்பட்ட வேளைகளில் உறுதியாய் அவர் நின்று ஆறு மாதம் முதல் மூன்று வருடம் வரைக் குமே சிற்சில சபைகளை குருவின்றி இருக்கிப்பார். பின் மக்கள் எகோபித்து வந்து, சாதிப்பிரிவின்றி தாங்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் எக்குருவையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பதாக ஒப்புக்கொள்வார்கள். அதன்பின் பணியிலமர்த்தப்பட்டார் அனுப்பப்படுவார். அவ்விதமான வேளைகள் இன்னும் அப்பக்கங்களிலுண்டு.

படிப்பில் முன்னேறி நிற்கும் தமிழ் கிறிஸ்தவர்களில் கூட இவ்விதச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. மிகுந்த உறுதியான கட்டுப்பாடுடைய சோமான் சபைகளிலுகூட இப்போது இந்தக் கிளர்ச்சி எழுந்தாயிற்று. மேலிடம் இதைக் கவனித்து ஆவன செய்தும் வருகின்றது. இவற்றையெல்லாம் கவனித்தால் நாம் தெளிவான அறிவுடையவர்களாய்

எது நியாயமானது என்று மட்டுமல்ல, எது தகுதியானது என்றும் கேட்கவேண்டும்.

சாதிப்பிரிவினை தீது, நீதி நியாயமற்றது. கடவுளைப் பிதாவாகக் கொண்டோருக்கு முற்றிலும் தகாதது. இவை மறுக்கமுடியாத உண்மைகள். ஆயினும் சாதி பழையது, வலிமை கொண்டது, இந்தியாவின் அமைப்புக்கு அடிப்படையானது. அறிவுயர்ச்சியாலும், அன்னிய நாட்டுத்தொடர்பாலும், சீர்திருத்த வாதிகள் விடா முயற்சியாலும், தனித்தனிச் சட்டங்களாலும் வசவரப் பெலன் குன்றி வருகின்றது. மதமாறுதலால் குடும்பச் சொத்து இழக்க நேரிடாமலும், அரசியல் சலுகை குறையாமலும் இருக்கும் என்பது நாட்டுச் சட்டத்திற்குள் அமைக்கப்பட்டு எவருக்கும் அனுபவமாகத் தொடங்கி விட்டால் சாதிக்கோட்டை நினைத்திராவண்ணம் கிடுகிடெனச் சரிந்து மறியும். அப்படிப்பட்ட காலம் வரத்துவக்கியாயிற்று. ஆதலால் பொன் மூட்டை தேடி பெண் வாத்துக் கோழியை கொன்ற வண்ணம் ஆத்திரப்படாது இருப்பது தீதாயினும், இருப்பதை இருக்கிறபடியே ஒப்புக்கொண்டு பயன் படுத்தி உழைப்பதில் தப்பு எதுவும் இல்லை. இதற்கு எதிரான கொள்கைகள் பலனுய்க் கூறப்பட்டு வரும் இந்நாட்களில், வெகு சிறுபாலோர் மட்டும் ஒப்புக்கொள்ளும் இக் கூற்றைத் துணிவுடன் கூற முன் வந்ததற்கு இறைவன் பெருங்கிருபையால் படிக்கவும், பல இடங்களைக் காணவும், பற்பல துறைகளில் பொறுப்பான பணிகளைச் சபையில் பல்லாண்டுகள் ஆற்றவும், ஏற்ற வாய்ப்புகள் எமக்கு கிடைத்திருப்பதே காரணம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதிகாரம் 6

இந்திய சபைகளின் சில பலவீனங்கள்

இன்னும் நூறுண்டுகள் தாண்டின பின் இந்நூற்றாண்டின் இந்திய வரலாறு எழுதப்படுமாயின், அதில் சிறப்பாக 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐந்து பெரியார்களின் வாழ்க்கை முக்கியமாய்க்குறிப்பிடப்படும். இந்தியாவின் இயக்கங்கள் யாவும் இந்த ஐவருக்குள் விளங்கும். முதலில் பெரியார் யாவரும் எதிர்பார்க்கும் காந்தியடிகள். இவரைக் குறித்து இவர் 'அரசியல் வாதிகளில் தேவபக்தர், பக்தர்களில் அரசியல் வாதி' "He was a saint among politicians and a politician among saints" என்று (champion of political equality) கூறப்படுகிறது. இந்தியா ஆட்சியில் விடுதலையடைதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. பற்பல முறைகளில் இத்தொண்டிற்காகவே அவர் பாடுபட்டார், கொல்லப்பட்டார். தம் காலத்தே வெற்றியும் பெற்றார். இந்திய சுதந்திரம் என்றும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கும்.

இரண்டாம் மனிதர் பண்டித ஜவஹர்லால்நேரு என் பதையும் சரித்திரக்காரர் குறிப்பிடுவர். வதுமையால்

வாடும் மக்களையும், செல்லத்தில் புரண்டுருளும் அரசர், நிலச்சுவான்கள், வியாபாரிகளையும் கண்டு கலங்கும் இந்தியா பொருளாதாரத் துறையில் சுயாதீனமும் சமநிலையும் அடையவேண்டுமென்பதே அவரது பெரும் வாஞ்சை. அத்துறையில் பல முயற்சிகளைக் கையாடி ஒரு வாறு வெற்றியும் பெற்றவர் இவராவர். அவர் காலத்தில் புதிய ரயில்பாதைகளும், தொழிற்சாலைகளும், அணைகளும் எண்ணெய்க்கிணறுகளும் உண்டாகி இந்தியா ஒரு அளவு பிறநாட்டைச்சாராது பொருள் உற்பத்தி செய்து சுயாதீன மடைந்தது. வரிகள் உயர்ந்து கூலி பெருகி உயர்ந்தவர் தாழவும், தாழ்ந்தவர் உயரவும் காரணமானார். அவரைக் குறித்து (champion of of economic equality) என்று கூறுவர்.

வங்காளத்தில் ரவீந்திரநாத்தாகூர் என்பவரை உலகம் ஒரு நாளும் மறவாது. காந்தியும் நேருவும் ஓர் பிரமம் ஆண்டிற்கப்பால் ஒருவேளை மறக்கப்பட்டுப்போகக் கூடும். இவர் எழுதிய நூல்களினிமித்தம் வள்ளுவரைப் போல அவர் என்றும் கலியுலகில் வாழுவர். பின் சந்ததியார் அவரது கருத்துக்கள் எந்நாட்டிற்கும் எக்காலத்திற்கும் உரியதெனப்படித்து மகிழுவர். அவற்றினூடே அவர் எனறும் நிலைப்பார். ஏனெனில் மனிதன் ஆத்மாவில் சுயாதீனமடைதல் வேண்டும். மனித ஆவி உண்மையாகிய கடவுளுடன் அன்பிலே லயித்து இன்பம் நுகர்தல் வேண்டும். இந்தியன் தலைநிமிர்ந்து அறிவினைத்தினின்றும் பயத்தினின்றும் விடுதலையடைதல் வேண்டும் என்றும் (champion of spiritual equality of man) அப்பத்தினால் மாத்திரமல்ல ஆவியில் உயர்பெறவும் வாழ்வதே வாழ்வு என்றும் போதித்துக்காட்டியவர் தாகூர் ஆவர்.

மீந்த இருவரைக் குறித்து தற்கால உலகத்தில் தப் றைக் கொள்கைகள் மிகுந்து கிடக்கும். அம்பேத்காரும் ஈ. வெ. ராவும் பல முறைகளில் ஒரே காரியத்திற்காய்ப் போராடுகின்றவர் ஆவர். தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் ஒருவராகிய டாக்டர் அம்பேத்கார் தம் சுய முயற்சியால் உயர்ந்தவர். அறிவுக்களஞ்சியங்கள் என்று பெருமை கொள்ளும் பிராமணராலும் மதிக்கப்படுபவர். தற்கால சுதந்திர இந்தியாவுக்கு சட்டதிட்டங்களை வகுத்துத் தொகுத்து ஒழுங்குபடுத்த, காந்தியாலும் நேருவாலும் கேட்கப்பட்டவர். காங்கிரசைச் சேராதவராயினும், காங்கிரஸ் ஆட்சியில் சட்ட மந்திரியாய் உழைத்தவர். அவர் பார்வையில் இந்தியாவின் சுதந்திரம் பிராமணருக்கும், மேலினத்தாருக்கும் மட்டுமே என்று தோன்றிற்று. உள்ளவனுக்குக் கொடுக்கப்படும் என்றபடி, உயர்ந்தோர் அதிகம் உயருவதற்கு விடுதலையும் பொருளாதாரமும் உதவிற்று போலும். தாழ்த்தப்பட்டவர் மனமே தாழ்ந்தது. நிமிர்ந்து பார்க்க இயலாவண்ணம் இந்துமார்க்கம் (பிராமணீயம்) சிர்கெட்டது. அது ஒரு தொத்துநோய். "நான் இந்துவாய்ப்பிறந்தேன். அது ஊழ்வினைப்பயன். இந்துவாய்ச்சாகேன். அது என் கையில் இருக்கிறது. எரியும் வீட்டை விட்டுத்தப்பி ஓடுவதுபோல தாழ்த்தப்பட்டோரே ஓடுங்கள். சமுதாய சம உரிமை இல்லாவிடில் மற்றெல்லாம் வீண். இந்த உரிமை உயர்வு தாழ்வு என்பதையே (வர்ணச்சிரம தர்மம் சாதிப்பிரிவினையே) உயிர்நாடியாகக்கொண்ட இந்து மார்க்கத்தாலுண்டாகப்போவதில்லை. மனிதனை மனிதனாகக்கருதும் மார்க்கத்தை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்." இதுவே அம்பேத்கார் போதனை.

ஈ. வெ. ராமசாமிப்பெரியார் காங்கிரஸில் காந்தியுடன் ஒத்துழைத்துப் போராடினவர். பலமுறை சிறையிலு மடைக்கப்பட்டவர். நாட்டின் அரசியல் விடுதலைப்போரில் பாடுகளை அடைந்தவர். இங்ஙனமிருக்க ஒரு புதிய கருத்து அவர் மனதில் தோன்றிற்று. " தமிழன் (திராவிடன்) பிராமணீயத்திற்கடிமைப்பட்டுக்கிடக்கின்றன். ஆரியன் வலக்காரத்தால் தமிழனை வென்றன். இதைக்காட்டும் கதையே இராமாயணம். சாமர் கடவுளல்ல, சிலை வணக் கம் எதற்கும் உதவாது. மொழியை அடிமைப்படுத்தியே மக்களை மனிதர் அடிமைப்படுத்துகின்றனர். தமிழுக்குள் ஆரியத்தைப் புகுத்தித் தமிழைப் பிரித்து, தமிழரையும் பிரித்து, இன்று வடமொழியாகிய இந்தியையும் திணித்து என்றும் தென்கை வடக்குக்கடிமைப்படுத்த முயல்வதைத் தடுக்கவேண்டும். மார்க்கம் இதற்குத் தடையாயிருந்தால் அதையும் உதறி எழுவோம். தமிழா தலைநிமிர்". சுருக்கத் தில் இதுவே ஈ. வெ. ரா. கொள்கை. அவரது கொள்கை தமிழகத்தை வென்றே தென்கின்றது.

1920 ஆண்டுப்பக்கம் தவக்கின அம்பேத்கார், ஈ. வே. ரா., இயக்கங்கள் அப்போதைக்கப்போது தடைப்பட்டாற் போல் தோன்றினும் நாளடைவில் வலுவே அடைந்து வரு கின்றன. அம்பேத்கார் தாம் இந்துமார்க்கத்தை விட்டு புத்த சமயத்தைத் தழுவினர். ஈ. வே. ராவும், பிண்டியார் களும் திராவிட கழகமென்றும், முன்னேற்றக் கழகமென் றும் பிரிந்து, வீண் குருட்டாட்டப் பழக்கவழக்கங் களைத் துணிவுடன் கண்டித்து, ஒருவாறு வெற்றியும் கண்டு வருகின்றனர். பிராமணிய எதிர்ப்பு பரந்தே வருகின்றது. இன்று இந்தியாவில் பதினைந்து மாகாணங்களையும் ஆளும்

தலைவர்களில் தெலுங்கு, தமிழ், மலையாள நாடுகளில் மட்டும் பிராமணரல்லாதோரும், ஆரியம் தலையெடுத்து நிற்கும் வட இந்திய முழுவதிலும் முதலமைச்சர்களும், தலைவர்களும் பிராமணர்களாகவேயிருத்தலையும் உற்றுநோக்கில் ஈ. வே. ரா. கொள்கை வெற்றிபெறுகிறதில்லை என்று யார் துணிச்சலுடன் கூறுவர்? அது வெற்றிபெறல் வேண்டும் வெற்றி பெற்றே தீரும்!! பண்டைத்தமிழகச் சென்னை மாகாணமே இந்தியாவிற்கு இம்முறையில் வழிகாட்டியாய் என்றும் விளங்கும். திராவிடமே கிறிஸ்தவத்திற்கு ஏற்ற மண். ஆரியமல்ல!

மேற்கூறிய தர்க்கத்திற்கிடமான அரசியல் கொள்கைகளுக்கும் கிறிஸ்தவத்திற்கும் என்ன தொடர்பு உண்டு என்று படிப்போர் நினைக்கக்கூடும். உற்றுப்பார்ப்போருக்கே அத்தொடர்பும் கருத்தும் வெளிப்படும்.

ஐக்கு பெரியோரால் சுட்டிக்காட்டப்பட்ட இந்திய இயக்கங்கள் அனைத்தையும் விடுதலை, ஒற்றுமை, முன்னேற்றம் என்ற மூன்று சொற்களிலடக்கலாம். கிறிஸ்தவ நற்செய்தியே இவற்றைக் கொடுத்தல் கூடும். கிறிஸ்துவே இந்தியாவுக்கு மெய்யான விடுதலையையும், அவருக்குள்ளான ஒற்றுமையும் மெய்யான (உடல், பொருள், ஆவி இம்மூன்றிற்குரிய) முன்னேற்றத்தையும் அளிப்பவர். இத்துறையிலே இந்திய கிறிஸ்தவம் எந்த மட்டும் தூண்டுகோல் செய்திருக்கிறது என்பதை ஆராய்வோம்.

விடுதலை

இது ஒரு அழகிய தமிழ்ச்சொல். விவிலிய நூலில் இது இரட்சிப்பு என்று கூறப்படுகிறது. கிறிஸ்தவர்கள்

பொதுவாய் கையாடிவரும் மோட்சம் என்னும் சொல் வேதத்தில் காணக்கிடையாவிடினும் அது குறிப்பிடும் கன்மை இந்த விடுதலையே. இந்துக்கள் முக்தி என்று அழைப்பதும் இதையே. 'திறண்' என்ற (இந்தி) வட மொழிச்சொல்லும் இதையே குறிக்கும். தமிழ்ச்சொல் லுக்கு உள்ளும் புறம்பும் பற்று விடுதலாகிய வீடு பெறு தலையே விடுதலை குறிக்குமென்க. பாவம், பயம், சாவு இவற் றினின்று மனிதனை விடுவிப்பதுவே விடுதலை. 'விடு' என்ப தினின்றே விடுதலை தோன்றிற்று. பலவிதமான கண்ணி களில் சிக்கிக்கிடக்கும் மானிடனின் கட்டுக்களை அவிழ்த்து அவற்றினின்று அவனை மீட்பதுவே மீட்பு ஆகும். இந்த மீட்பு என்பதைக்குறித்த ஆழமான அறிவு நமக்குத்தேவை.

நீ மீட்கப்பட்டிருக்கிறாயா? இரட்சிக்கப்பட்டிருக்கி றாயா? என்ற கேள்விகள் கிறிஸ்தவப்பிரசங்கிமாரால் கேட்கப்படும் ஒரு பொதுவான கேள்வியாகும். பலர் இதற்குத் தெளிவான விடை பகரத்தெரியாமல் திகைப்பர். எழுப்புதல் கூட்டங்களில் இக்கேள்வி அடிக்கடி எழும். மனப்பாவசமடைந்த சிலர் எழுந்து நிற்பதன்மூலம், கை உயர்த்துதல் மூலம் தங்கள் 'மீட்பு' க்குச் சாட்சி பகருவர். ஆயினும் தாங்கள் சாட்சி பகரும் 'இரட்சிப்பு' என்றால் என்ன என்பதைத் தெளிவாய்ச் சொல்ல இயலாதேயும் சில வேளை தயங்குவர்.

ஆபத்துக்காலத்தில் நீ என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன் என்பதற்கிசைய நோய், பிணி துன்ப காலங்களில், கடவுளைக் கெஞ்சிக் கேட்பதின் மூலம் இரக்கம்பெற்று மறுபடியும் இவ்வுலகில் சிலகாலம் குறை யில்லாது வாழுவதற்கு உதவியாயிருக்கும் நிலையை, இரட்சிப்பு

என்று அழைப்பது இயல்பே, மடிந்து போகிறோம், போதகரே இரட்சியும் என்று கதறுவோரின் உடலைப்பற்றிய குறைகள் எதுவும் நீங்குவதும் ஒருமுறையில் விடுதலை (இரட்சிப்பே) ஆகும்.

லூக்கா 19:1–10ல் குறித்தொண்ட்முனிவர் சகேயுவின் சரிதை வருகிறது. இயேசு அவன் வீட்டிலிருந்து வெளியேறுமுன் இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என மொழிந்தனர். யூயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயுவுக்கோ, அவன் வீட்டில் மற்றெவருக்குமோ நோய் முதலிய குறை இருந்ததாகக் கூறப்படவில்லை. அவனுடைய குணத்திலிருந்த குறை நீங்கிற்று. தன்னலவாதி, பிறர்நலம் கருதி, தன்பொருள் பாதியைச், சமர்ப்பணம் செய்யவே, அன்புள்ள நாதரும் அவன் மொழி கேட்டு, இன்றே இம்மனை, விடுதலை பெற்றது என்றனர். அவ்வாறே மனிதன் தன்னலமாகிய கட்டுகளிலிருந்து விடுவிக்கப்படவும், இயேசுவின் சிந்தையை அணிவதால் அவரருள் பெற்று, வெற்றியுடன் வாழ்வதுமே விடுதலையாகும் என்பதும் உண்மை.

குறை மாறுதல், குணமாறுதல் ஆகிய இவ்விரண்டுடன் இந்த இரட்சிப்பு நின்று போவதில்லை. அப். 2 முதல் 4 மட்டுமுள்ள பாகங்களில் பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்தாவியின் பிரசங்கத்தைக் கேட்டு தங்கள் பொருட்களை விற்று கிருத்தொண்டர் பாதம் படைத்து "அப்பம் பிட்டு, அன்பின் விருந்துண்டு" மகிழ்ச்சியுடன் வீடுதோறும் ஜெபம் செய்து கிரிந்த ஆதிச்சபை மக்களைக் குறித்து, இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்

கொண்டு வந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. இங்குத் தனிக்குறை நீங்குதலுடன் விடுதலை நின்றுவிடாது, குணக் குறை மாறுவதையும் தாண்டி, குலக்குறை நீங்கி உயர்வு தாழ்வு என்றில்லாப் பொதுவுடமை பெற்று வாழும் ஒரு கூட்டம் மக்களுக்கு, விடுதலையடைந்தோர் எனப்பெயர் சூட்டப்படலாயிற்று என்று காண்போம். குலமீட்பு ஆக இது உயர்ந்தது. பொதுவுடமை என்ற சொல் இன்று மேலிட்டு எழும்போதெல்லாம் இந்த ஆதிசபை வரலாற்றை அறிதல இனிய பயன்தரும்.

இங்கு இரட்சிப்பு என்பது, தனித்தனி ஆத்துமா சுவி சேஷப்பிரசங்கம் கேட்பதன் மூலம், பால உணர்ச்சி அடைந்து, குற்றம் அறிக்கை செய்து விசுவாசத்தால் தன்னேத்தத்தம் செய்து புதிய வாழ்க்கைக்குள் நுழைவதை மட்டுமல்ல, தன் பொருளாஸ்தியையும் கொடுத்து, சமூதாய நலனுக்காய் உயர்வு தாழ்வின்றி ஒன்றுபோல் வாழும் நிலை யையும் வாழ்தலையும் குறித்தது.

தேவனுடைய இராஜ்ஜியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் (மனிதர் ஒருவருக்கொருவர் சீராய் வாழுதல்), சமர தானமும் (அவ்வாழ்க்கையாலுண்டாகும் அமைதி), பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமும் (மேலிருந்து கிடைக் கும் ஒரு புதிய உயிரால் மட்டும் மனுக்குலத்துக்குக் கிடைக் கும் மெய் இன்பம்) ஆயிருக்கிறது என்று பரி. பவுலடிகளும் கூறினர். ரோ. 14:17.

அவரது நிருபங்கள் பலயிடத்தும் முடிவான விடுதலை யில் சிருஷ்டிக்கும் பங்குண்டு என்று கூறுவதைக் காண லாம். ரோ. 8:19–21, எபே. 1:8–10. வானமும் பூமி

யும், மண்ணும், விண்ணும் இயேசு மயமாய் மாறுதலே மீட்பாம் (விடுதலையாம்). தேவ புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்டி ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில் அவை 'விடுதலையாக்கப்பட்டு..... மகிமையான சுயாதீனத்தை அடைந்துகொள்தல் வேண்டும்' இந்நிலை மானிடன் தேவ புதல்வனுய் மாறும்போது மட்டுமே வாய்க்கும்.

கடவுள் பிதா, யாவரும் மக்கள், என்னும் போதனை இயற்கையாய் அமைந்திருக்கும் ஒரு பொது விதியல்ல. மாக்களைப்போன்றவனே மானிடன். அவன் கடவுளருளால் அவருக்கு மகனுகுதலும் கூடும். இந்த உரிமை மாக்களுக்கில்லை. மாக்களைப்போன்றவர் மக்களாகுவதெப்படி என்பதே கேள்வி. இயேசுநாதரை ஏற்றுக்கொள்வதாலேயே இந்நிலை கிடைக்கிறது. யோ. 1.12. மனித குலம் முழுவதும் இயேசுவின் சிந்தையை அடைவதற்கெனவே அவர் சிலுவையேறி மரித்தார். அவருடன் தனது சுயத்தை அவர் அருளால் கொல்பவனுக்கு அவர் ஈந்த புத்துயிர் கிடைக்கும். அப்போதே அவன் பிள்ளையாவான். கலா. 2:20. பிள்ளைகளுக்குரிய விடுதலையையும் பெறுவான். இக்காலம் எப்போ வருமென்றே இயற்கை அனைத்தும் வாஞ்சித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. ரோமர் 8:19–21.

விடுதலை என்னும் இலைப்பாறுதல் வேலையற்று நடக்கும் வீணருக்குரியதல்ல. தன் மனம் போல் நடப்பது விடுதலையாகாது. ஒவ்வொரு மனிதனும் தன் மனம்போல் நடக்கத்தவக்கினால் இவ்வுலகமே ஒரு பித்த கோயாளிச் சாலை (lunatic assylum) ஆகிவிடும். அங்குமட்டுமே தன்மனம் கட்டுப்படுத்தப்படா அளவில் நிறைவேறக்கூடும். தன் மனம்போல் பிறர் பொருளை எடுக்க முயல்வோருக்கே

சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டி ஓட்டப்படித்தவன் தன் மனம்போல் அல்ல, பாதை விதிகளுக்கு அடங்கி ஓட்டுகையிலேயே சுயாதீனமாய் ஓட்டுவான். மற்றப்படியானால் தனக்கும் பிறருக்கும் தண்டமிழைப்பான்.

விடாமுயற்சியுடன் தனது கடமையை அறிந்து அவற்றை நிறைவேற்றுபவன் விடுதலையடைந்தவன். அதை அறியாதவனும், அறிந்தும் செய்யாதவனும் உண்மையில் அடிமையாகவே உழலுவான். "என்நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு விடுதலை கிடைக்கும்" மத். 11:29. இயற்கையின் விதிகளை மீறுகிற உடல் நோய்வாய்ப்படும். அறிவின் விதிகளை மீறுதல் இன்னலிழைக்கும். ஆண்டவன் விதிகளை மீறுபவனே பாவி. 'உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம்'. ஆகவே கடவுள் சித்தத்தை அறிவதும் அதற்கு அடங்கி நடப்பதுவே மெய்யான விடுதலையை அளிக்கின்றது.

மீனின் விடுதலை அதற்கென்று அமைக்கப்பெற்ற நீருக்குள்ளேயே. புகைவண்டியின் விடுதலை தண்டவாளங்கள் மீது மட்டுமே; அவற்றிற்கு வெளியில் அல்ல; படகின் விடுதலை நீருக்கு மேலேயே. ஒவ்வொன்றின் விடுதலை தன் தன் இடத்திலேயே. மனிதன் விடுதலை தேவசித்தத்திற்குள்ளேயே. யோ. 8:32. உண்மையே விடுதலையளிக்கும். இயேசுவே உண்மை.

இவை இப்படியிருப்பதால் கிறிஸ்தவம் செல்லுமிடமெல்லாம் படிப்படியாய் விடுதலையுமுண்டாகும். II கொரி. 3.17. அதைத் தழுவுவோர் பயத்திற்கும், பாவத்திற்கும்

மரணத்திற்கும் நீங்கி விடுதலை அடைவார்கள். இந்தியா வாஞ்சிக்கும் எல்லா விடுதலைக்கும் கிறிஸ்துவின் திருச் சபையே வழிகாட்டி. சபைக்குள் மனுக்குலத்தின் வாஞ்சை கள் திருப்தியாகவேண்டும். அப்பொழுதே அது மீட்கப் பட்ட கூட்டமாகும்.

சீர்திருத்த சபைகள் இந்தியாவில் உழைக்கத்தவங்கி இருநூற்றாண்டுகளுக்குள் அரசியல் விடுதலை, பொருளா தார சமத்துவம் முதலிய துறைகளில் எல்லாம் இந்தியா முன்னேறி வந்திருக்கிறது. பாலோக ராஜ்ஜியம் உறை மோருக்கு ஒத்தது. பால் முழுவதையும் புளிக்க வைக்கும் வலிமை அதற்குள் உண்டு. முடிவில் முழுவதும் புளித்தே தீரும். பால் முயன்றால் மோரைப் பாலாக்க இயலாது. கிறிஸ்தவன் சூழ் நிலையை மாற்றுவான். சூழ்நிலையால் அவன் மாறான். II கொ. 5.17.

இந்த மெய்யான விடுதலையை எப்பக்கத்திலும், எத் துறையிலும் கிறிஸ்தவம் கொடுத்துக்கொண்டே வருகின் றது. ஆகையால் பயப்படாதே சிறு மந்தையே (minority) முடிவில் நாடு உனக்கே, ஏனெனில் உன்னை ஆளும் அரசன் உனது குணத்தை படிப்படியாய் உன்னிலமைக்கும் உனது அருமைத் தந்தையே. லூக். 12.32.

அதிகாரம் 7

ஒற்றுமை

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் மார்ட்டின் லுத்தர் சாஸ்திரிமார் ஐரோப்பாவில் தோன்றி, அக்காலச் சபையின் பற்பல தப்பறைகளைக் கண்டிக்க முன் வந்து, முடிவில் பிரிந்துபோய் சுத்த சுவிசேஷத்தைப் பாதுகாக்கும் முறையில் சீர்திருத்த சபையின் மூதற்பிதா ஆனார். நாளடைவில் சிறிதும் பெரிதுமான பற்பல வேறுபாடுகளால் சபை சிதைந்து பிரிந்துகொண்டேபோயிற்று. இப்பிரிவினைகள் நாளடைவில் உறுதிகொண்டு முடிவில் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிலையையும் சிற்சில இடங்களில் பிறப்பித்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில நாடுகளில் தோன்றிய (Evangelical Rairvel) சுவிசேஷ எழுப்புதலின் பயனாய், பற்பல மிஷனரி சங்கங்கள் ஐரோப்பாவில் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் தனக்குக்கிடைத்த வெளிச்சத்திற்கிசைய கிறிஸ்தவ நற்செய்தியைக் கூறி அறிவித்தது மட்டுமல்ல, செய்தி கேட்டு நம்பின மக்களை ஒழுங்கே ஒரு கட்டுப்பாட்டிற்குள் அமைக்க எண்ணினதால் சம்தம் ஊரில் சபை ஆளுகை முறை எவற்

றிற்குள் அவர்கள் பிறந்தனரோ அப்பிரிவைத் தாங்கள் சென்ற இடங்களிலும் முன் கருதலும் கூரிய நோக்கும் இல்லாமல் நிலைநாட்டினர். வேறு என்ன தான் அவர்கள் செய்திருக்கக்கூடும்? இந்தியாவில் ஊருக்கு வெளியே, நாலு சாதிகளுக்குரிய சிலாக்கியங்களுக்கு அண்ணியராய், தேடுவாரற்று மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல் அலைந்தோரைத் தெரிந்தெடுத்து, கிறிஸ்தவத்தை அவர்களில் பரப்பி அவர்கள் அதைத் தற்காத்துக்கொள்ளக்கூடிய முறையில் சபை ஒழுங்குகளையும் வகுத்தனர்.

பழக்கத்திற்கு எளிதில் அடிமையாகக் கூடிய மனித இயற்கை பழையதே நல்லதென்றுப் பிடிவாதம் கொள்வ தினும் ஆச்சரியமில்லை. ஒரு நூறாண்டுகளில் இந்தியாவின் இளஞ்சபைகளும் பருவமாய் வளர்ந்ததின் பயனாய் தமது மிஷனரிமாரிடமிருந்து கிடைத்த முறையே நல்ல முறை, அதுவே போதுமானது, எல்லாம் அதிலடங்குகிறதென்று நினைக்கத் துவக்கினர். இதன் பயனாகவே ஜனத்தொகையில் நூற்றுக்கு இரண்டுபேர் மட்டும் கிறிஸ்தவராயிருக்கும் இந்திய கிறிஸ்தவர் நூற்றுக்கதிகமான சபைகளில் பிரிந்து காணப்படுகின்றனர்.

குருடர்கண்ட யானைபோல் ஒவ்வொருவர் கூற்றிலும் சிறுசிறு உண்மைகள் இருப்பினும், யாவரும் ஒன்றுபட்டு கலந்து கொள்வதாலேயே யானை உருவம் வெளிப்படுமாப் போல, கிறிஸ்தவ சபைகள் ஒன்றுகூடும்போதும் உண்மைக் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படாது. இக்கால இந்திய ஒற்றுமையடைய முயன்று 672 கிற்றாசர்களை ஓரே நாளில் முடியிழக்கச் செய்ததைக் கண்டித்தும், கிறிஸ்தவ சபைகள் காற்றின் போக்கைக் கவனியாதே போவது மதியீனமன்றி

மற்றதுவுமல்ல. சீனச்சபைக்கு வந்த கேடு இந்தியாவுக் குள்ளும் வராதென்று வீண் வீம்பு கூறுவது மடமையே யாகும்.

1935-ல் டாக்டர் அம்பேத்கார் தம் வகுப்பார் ஏழு கோடி மக்களும் இந்து மார்க்கத்தை விட்டு வெளியேற வேண்டுமென அறை கூவின காலத்தில் அவரை அணுகிய மிஷனரிமாரிடம் அவர் ''இப்பொழுது தாழ்த்தப்பட்ட நாங்கள் ஒருமைப்பட்டு இருக்கிறோம். உங்கள் மார்க்கத் தைத் தழுவினால் எங்கள் ஒற்றுமை கெட்டு 320 தொழு வங்களில் நாங்கள் அடைபட்டுப்போவோமே'' எனக்கூற வும் வெட்கத்துடன் தலைகவிழ்ந்தோராய் அவர்கள் திரும் பினராம்.

1919-ல் தாங்கம்பாடியில் கூடி தென்னிந்திய திருச் சபையாக மாறத் தலைவர் பலர் ஊக்கம் கொண்டனர். இந்த ஐக்கியக் கமிற்றி தொடர்ந்து பணியாற்றிவரவே, அம்பேத்காரது சொற்கள் இவர்களுக்கு அதிக மன நோவைக்கொடுத்ததின் பயனால், இவர்கள் ஆத்திரமாய் உழைத்து கடவுளருளால் 1947-ல் தென்னிந்தியாவில் முக்கிய சபைகள் அனைத்தும் ஒன்றுசக்கூடியதாயிற்று. இந்த இயக்கம் இன்னும் வலுத்துக்கொண்டே வருகிறது. ஒன்றுகாத சபையால் இந்தியாவுக்கு அதிகப் பயன் ஏற் படப் போவதில்லை. ''அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்று யிருக்கவும் என்று'' ஜெபித்த அருமை நாதர் ஜெபம் கேட் கப்பட்டே தீரும்.

ஒரு வீட்டில் நாலு குழந்தைகள் இருந்தார்கள். மூத்த மூன்றுபேர் பெண்கள், அவர்களுக்கு ஓரே இளைய

தம்பி. ஒருநாள் அச்சிறுவனுக்கு ஒரு பிறந்த நாள் பரிசு இனத்தார் ஒருவரிடமிருந்து தபால் வழி கிடைத்தது. அது ஒரு அழகிய பட்டுச்சட்டை. சிறுவன் அதை அணியவே அவனுக்குச் சட்டைக்கை ஒரு அங்குல அதிகமாயிருந்ததால் பொருந்தவில்லை. மூவரிடமும் அவன் அதை வெட்டிக் குறுக்கவேண்டினான். மூத்தவன் எனக்குக் கல்லூரிக்கு வேளையாயிற்று என்னால் கூடாது என்றும், அடுத்தவள் என் தங்கையைக் கேள் என்றும், மூவரிலும் இளைய சிறுமி தனக்கு அதிகவேலையிருப்பதாகவும் கூறி அவனுக்கு ஒருவரும் உதவிசெய்யவில்லை. திரும்பத்திரும்ப அலட்டிக் கொண்டேயிருந்த சிறுவனும் இரவு துக்கத்துடனேயே உறங்கிவிட்டான். யாவரும் தூங்கினபின் மூத்தவள் எழுந்து மற்றெவருக்கும் தெரியாமல் சட்டையை வெட்டி, அளவாய்க் குறுக்கிச், சீராய் மடித்துப் பெட்டிக்குள் வைத்தாள். இரவில் நடுச்சாமத்தில் அடுத்தவள் ஒருகணக் காணவே, வீண்ட கையுடைய சட்டையை அணிந்த சிறுவனைச் சொப்பனத்தில் கண்டு, சட்டென்று எழுந்து, ஒரு வெட்டு வெட்டி, அங்குலம் குறுக்கி, அன்பின் கடமையைச் செய்தே முடித்தாள். அதிகாலையிலே அடுத்த சிறுமியும் தம்பியை எழுப்பி, அவன் கண் முன்னால், புகழ்பெற எண்ணி, வேண்டியவண்ணம், வெட்டி முறித்துத் தைத்துக் கொடுக்கவே, சட்டையை அணிந்த அச்சிறுவனுக்கோ மிகச் சிறிதான சட்டைக் கை மன வருத்தத்தையும் நஷ்டத்தையுமே அளித்தது. ஒத்துழையாத காரணத்தால் பற்பல மிஷன்கள் ஒரே ஊரிலும் சிற்சிலவேளை இதைப்போலொத்த பணி செய்து வருவதை இந்தியாவில் காண்போம். எல்லாரும் இயேசுவைப் பிரசங்கித்தாலும் ஒத்துழையாத நிமித்தம் கிறிஸ்தவம் பெலவீனமடைந்துபோகின்றது.

II

சீர்திருத்த சபைகளில் இரண்டாம் பெலவீனம் அவைகளில் காணப்படும் வறுமையே. ரோமான் சபைக்குப் பணக்குறைவே கிடையாது. வீடுவீடாய் நழைக்கு சபையின் மக்களையே மறுமுறை ஞாஸ்ஞனப்படுத்தி பிரித்தெடுக்கப்பட்ட சபைகளைத் தோற்றுவிக்கும் "தெரிந்து கொள்ளப்பட்ட" சின்னஞ்சிறு குழுக்களிலும் இக் குறை இல்லை. எப்போதும் சற்றும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் தந்திரமாய் நுழைந்து அவர்களை வசப்படுத்தின பின் பத்திலொன்றைக் கொடுக்கச் செய்தும் பொன்னுபரணங்களைக் கழற்றச் செய்தும் இப்படியாக தம் காரியங்களை நடத்திக்கொள்கின்றனர்.

கொடை மன மகிழ்ச்சியையும் திருப்தியையும் பலருக்கும் அளிக்கும். ஐந்து அப்பத்தையும் இரண்டு சிறு மீன்களையும் தனக்கென்று கொண்டு வந்திருந்த சிறுவன் அவற்றை அந்திரேயாவின் தூண்டுதலால் ஆண்டவர் கையில் கொடுக்க, அவர் அவற்றை ஆசீர்வதித்துச் சீடர் வழி பரிமாறினதின் பயனாய்த் தானும் உண்டு ஐயாயிரம் ஆண்களும் திரள் கூட்டம் பெண்கள் பிள்ளைகளும் உண்டு களிக்கக் காரணமாயிருந்தாற்போல் இக்காலத்திலும் சிறு சபைகள் தங்களைப் பிரதிஷ்டை செய்கையில் கிறிஸ்தவம் வலிமைபெறும். சபை வளரும், கொடையே கிறிஸ்தவம்.

வெள்ளாக்கல் குப்பியின் நளதமென்னும் பரிமள தைலத்தை ஆண்டவர் சிரசிலூற்றிய மங்கையைக் குறித்து "இந்த வீண் செலவு என்னத்திற்கு" என்று சொல்லி மனமடி-

வடையும் யூதாஸ் போன்றவர் எக்காலமும் இருப்பார்கள். எல்லோரும் முறுமுறுத்த போதிலும் இயேசுநாதர் அவளை மெச்சி நற்சாட்சியளிக்கக்காரணம் அவள் செய்கையில் அவருடைய குணம் வெளிப்படுத்தப்பட்டதாலன்றோ? தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கப்போகும் சிலுவை மரணத்தை அந்தத்தலைக்குப்பியை உடைத்த பெண்மணியில் கண்டல்லவோ அன்பர் மகிழ்ந்தார். நாமும், நம்மையும் நமது பொருளையும் அவர் பாதம் படைக்கையில் அவருடைய குணத்திற்குப் பங்காளிகளாவோமே.

மத்தேயு இரண்டாம் அதிகாரத்தின் கிழக்கத்திய அறிஞர், முடிவில் குழந்தையாகிய இயேசுவைத் தாயாராகிய மரியம்மாளிடமிருக்கக் கண்டு, அவர்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து, அவரைப் பணிந்து பின் தங்கள் பொக்கிஷங்களாகிய பொன்னையும், தூப வர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் காணிக்கையாகப் படைத்தார்களே. கண்டவன் தொழுவான். தொழுபவன் எதைத் தொழுவானோ அதன் குணமடைவான். விக்கிரகங்களைச் செய்பவனும் அதைத் தொழுபவனும் முடிவில் அதைப்போலவே ஆவான் என்று 2500 ஆண்டுகளுக்கு முன்னேயே யூதர் அறிந்தனரே. சங். 135: 18. இயேசுநாதரை உள்ளபடி காண்கிறவன் (அதிகிறவன்) அவரைப் பணிந்தே தீருவான். அவரை உண்மையுடன் மனதில் தியானம் செய்து தொழுபவனுக்குள்ளே அவர் குணமும் படிப்படியாய் நாளடைவில் பதியும். தம்மைத்தாமே கொடுப்பதொன்றே அவர் குணமாமே.

கிறிஸ்தவ ஆராதனைகளில் மிகச் சிறந்தது பரிசுத்த நற்கருணை ஆராதனையாகும். அதில் அப்பத்தை எடுத்து,

ஸ்தோத்திரம் பண்ணி, அனுதப்பிட்டு கொடுப்பதுவே மத்திபமாகும். ஆண்டவர் காதில் எடுப்பவனே ஆசீர்வதிப்பார். அவரால் ஆசீர்வதிக்கப்படுபவன் பிட்கப் படுவான். பிறர் பலனடைய அவனே கொடுக்கப்படுவான். இந்தக் கொடையே கிறிஸ்தவமாகும்.

கொடையிலே சபைகள் பெருகவேண்டும். கொடை ஒரு கிருபை. கிருபைபெற்றவன் கொடான். கொடை சீர்ப்படுத்தப் படவேண்டும். தன்தன் தகுதிக்கேற்றபடி கொடுப்போர் வெகு சிலரே. ஏழைகள் என்று எண்ணப் படுவோரே ஏராளமாய்க் கொடுக்கின்றனர். எந்தச்சபை யிலும் இந்த உண்மையைக் காணலாம். ஒழுங்கே கொடுக்க சபைகள் சற்றல்வேண்டும், உற்சாகத்தோடு கொடுக்க வேண்டும். விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல, தன்தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கவேண்டும். உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? என்றபடி எல்லாம் நமக்குக் கிடைத்திருக்க இறைவன் கிருபையைப் பகிர்ந்து கொடுக்கவும் சபை இன்னும் அதிகம் படிக்கவேண்டும்.

III

கிறிஸ்தவம் அந்தந்த நாட்டிற்குரிய இடல்டைதல் வேண்டும். லத்தீனிலேயே பூசை நடத்துவதால் மக்கள் அதன் கருத்தை அறிதல் எளிதல்ல என்று கண்ட சோமன் சபையே இன்று வேதத்தை மொழி பெயர்க்கவும் நாட்டுமொழிகளில் போதிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள். நமது சபைகளில் பாடப்படும் ஞானப்பாட்டுகளைக் குறித்து இந்துக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை நாம் எண்

ணிப் பார்ப்பதில்லை. இந்திய கிறிஸ்தவர்கள் பழக்கங்களை விளக்கி எழுதுகையில் இப்பாட்டைக் குறித்து ஒருவர் "வாசமொருமுறை மண்டபமொன்றில் கூடி மதிவிடியும்படி மூழங்கிக் கதறுவது ஒன்று" என்று எழுதியிருக்கிறார். ஆங்கில இராகங்களில் ஆங்கிலப் பாட்டுகளைப் பாடுதல் வேண்டும். தமிழ்ப்பாடல்கள் தமிழிசையிலேயே பாடப்படுதல் வேண்டும். இது இயற்கை விதி. இதற்கு மாறானது மடமையும் பிடிவாதமுமேயாம். யூதனுக்கு யூதனைப் போலவும் கிரேக்கனுக்குக் கிரேக்கனைப்போலவும் ஆனேன் என்றார் பவுலடிகள். முதல் மூன்று சுவிசேஷங்களிலும் தேவனுடைய இராஜ்ஜியம் என்னும் சொல் ஏராளமாய் வந்திருக்கிறது. யோவான் சுவிசேஷத்தில் அச்சொல் மருந்துக்கும் கிடையாமல் போனதின் காரணம் என்ன? இதற்குப் பதிலாய் இதே கருத்து இன்னொரு சொல்லால் அல்லவா காணப்படுகிறது. ஜீவன், நித்திய ஜீவன் என்னும் சொற்களாலேயே யோவான் இக்கருத்தை வெளியிடக் காரணம் அவர் எழுதினதைப் படிக்கப்போகும் மக்கள் தேவராஜ்ஜியம் தேடிய யூதரல்ல, கிரேக்க ஞானம் தேர்ந்தவர்களேயே என்பது தெளிவு.

கிறிஸ்தவ அனுபவம் விளங்கக்கூடிய முறையில் கூறப்படவேண்டும். பற்பல இடங்களில் இந்துக்களுக்குப் பிரசங்கம் செய்தும், செய்வதைக் கேட்டும் எமக்குப்பழக்கமிருப்பினும், பலபோதும் கூறப்படும் காரியங்கள் உண்மையாயிருந்தபோதிலும், கேட்போருக்குப் பயன்படக்கூடாத வண்ணம் 'கிறிஸ்தவத்' தமிழிலும், தலைக்கு மேலேயும் பிரசங்கிக்கப்படுவதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியதிருக்கிறது. தமிழன் பேரக்கு, அவன் கலை, மனதின் நாட்டம், அந்நாட்டங்களை வெளியிட்டிருக்கும்

இலக்கியம், இவற்றைக் கவனியாது உபதேசம் கொடுத்தால் ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களாய் காணப்படுவோமே. குளிரின் மிகுதியால், மேலைநாடுகளிலே தேவாலயங்கள் சுவர் மிகுந்தும், காற்றுச்செல்லும் ஜன்னல்கள் சிறுத்தும் இருப்பதால் தமிழ்நாடுகளிலும் அப்படியே கட்ட வேண்டுமென்பது தேவையுமில்லை ஞானமுமல்ல. செய்தி ஒன்றே, கேட்போர் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் அச்செய்தி பரவுதல் வேண்டும்.

இந்திய சபைகள் ஒற்றுமைக்கும், விடுதலைக்கும் வழி காட்ட இயலுமோ என்று மயங்க வேண்டிய காலமே வந்துள்ளது. எனினும் பலவீனமானவைகளைக் கொண்டு தமது வேலையைச்செய்து வரும் கடவுள் ஆச்சரியமான முறையில் அதை உபயோகித்து வருகிறார்.

IV

பெரிதும் அனுகூலமுமான வாசல் தனக்குத் திறந்திருப்பதாகவும் விரோதம் செய்கிறவர்கள் பலர் இருப்பதாகவும் எபேசு பட்டணத்தைக் குறித்து பவுல் எழுதினார்.
1 கொ. 16:9

கிறிஸ்தவத்திற்கு இந்தியாவின் தற்கால சூழ்நிலையும் இது போன்றதே. இராமர் படத்தை எரிக்க முயல்வதும், பிள்ளையார் பொம்மைகளை உடைத்து மகிழ்வதும், தெய்வங்களைத் திரைப்படத்தில் நகைச்சுவையளிக்கவென்றே கொண்டுவருவதும், படித்தோர் தம் மதப்பற்றைக் குறிப்பிடும் அடையாளங்களை நெற்றிகளில் அணிய வெட்கப்படுவதும், விஞ்ஞான வளர்ச்சியும், அயல்நாட்டுத் தொடர்பும், ஆசிடல் சமத்துவம் எவருக்கும் ஒன்றுபோலானதுவும், ஆண் பெண் என வேற்றுமையில்லாது எவரும் விரும்பிய

தொழிற்செய்து ஊதியம் பெற்று வாழ வசதி கிடைத்திருப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாய் இந்தியனெவனும் தன் தன் விருப்பப்படி தான் தெரிந்துகொண்ட சமயத்தைத் தழுவது மட்டுமல்ல அச்சமயக்கூற்றைப் பிறருக்குச் சொல்லிப் பரப்பவும் நாட்டுச் சட்டமே இடங்கொடுத்திருப்பதுவும், கிறிஸ்தவத்திற்குப் பெரிதும் அனுகூலமுமான வாசல்களேயாகும்.

இப்படியிருப்பினும் விசாதம் செய்கிற பலரும் இருந்தே வருகின்றனர். பிராமணீயம் புத்த மார்க்கத்தை விழுங்கிக்கொண்டது. முஸ்லிம் மக்களும் அதன் கொடுமையைக்கண்டு அஞ்சி தமக்கென்று ஒரு பரிசுத்த நாட்டை (பாக்=பரிசுத்த "உருது") அமைத்துக்கொண்டனர். கொட்டைக்கருகிலேயே மாம்பழத்தின் புளிப்புத்தெரியும். சாதிப் பிரிவினையென்ற இந்துமார்க்கத்தின் மூதுகெலும்பே பிராமணியம். மார்க்கப்பற்றுக்குறைந்த இந்துக்கள் தான் நாட்டின் நலத்திற்காய்ப் பணியாற்றியுள்ளனர். பற்பல பெயருடன் சாதிப்பிரிவினையை நிலைநாட்ட முயல்வோரே கிறிஸ்தவத்திற்குப்பகைவராய் விளங்குவர்.

எனினும் பேதைகளுக்குத் தம்மை வெளிப்படுத்தும் கடவுளோ ஞானிகளே அவர்கள் தந்திரத்திலே பிடிக்க எண்ணியே உண்மையும் எண்மையும் தெரிந்துகொண்டார். ஒரு மனிதனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்ற வண்ணம் கிறிஸ்தவத்திற்கு எதிரிகள் கிறிஸ்தவர்களே. சபைகளில் காணப்படும் பிரிவினையும், தன்னலம் குன்றிவிடுமோ என்னும் பயத்தால் தட்டாஞகிய நிமேத்திரியு எபேசுவின் பரமர மக்களைத் தியானுள் என்னும் தேவதையின் பெயரைச்சொல்லி எழுப்பிவிட்டுக் குழப்பம் பண்ணி

ணது போலவே அப். 19:23–29, இக்காலத்திலும் இந்திய சபையில் பற்பல பாகங்களில் சபைக்குரிய சொத்துக்களைக் கைப்பற்ற போராசைகொள்ளும் சபைத் தலைவர் சிலரே, பற்பல மிஷன்கள் பெயரைச் சொல்லிப் பிரிவினையைச் சபைகளில் நுழைத்து, ஒன்றுமறியாதோரை ஏமாற்றிக் கூச்சலிடச்செய்து சபைகளைப் பழாக்கி வருவதும், நிற்கத்தகாத இடத்தில் பாழாக்கும் அருவருப்பு நின்றவண்ணம் கிறிஸ்தவமென்றால் இன்னதென்று குறித்தறியாத பலரோ சபைகளில் தலைவர்களாய் விளங்க முயன்று 'ஓட்டுப்' பிடித்து உயர எழும்புவதும், கொடையை நடுவாகக்கொண்ட கிறிஸ்தவத்தை மறுதலை, 'எனக்கென்ன கிடைக்கும்' என்னும் கேள்வி கேட்கும் மக்கள் சபைக்குள் பெருகுவதும், சபைக்குள் எழும் பிணக்குகளைத் தாமே தீர்த்துக்கொள்ள மதியற்று, இந்து முஸ்லீம்கள் முன், கோர்ட்டுகளில் கைகட்டி நிற்க வெட்கமில்லாதே போவதும், தனிஜெபம், குடும்ப ஜெபம், கோயில் ஆராதனை, சாக்கிரமெந்துகள், வேதபாடம் இவற்றை அசட்டை செய்வதுவும், இவைபோன்ற குறைகளே பழுத்திற்குள் புழுவைப்போல் சபைகளைப் பாழாக்கக்கூடியப் பெருஞ்சத்துருக்கள் என்பதை மறவாதிருப்போமாக.

காரியத்தின் கடைத்தொகையைச் சுருக்கிக் கூறுவோம். நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனை ஒரு முறை இயேசுவண்டை கொண்டு வந்தனர். மாற். 2. அந்த அற்புதத்தை ஒரு உவமையாக்கி என் கருத்தை வெளியிட்டு முடிக்கிறேன்.

அந்த நாலு பேருக்கும் இயேசுவைப் பற்றிய ஒரு அன்பு இருந்தது போலும். அவர் திருவாய்மொழியால் இழுக்கப்பட்டோ, உடல்நலம் குன்றிய காலத்து அவரது அற்புத சுகத்தைத்தானே பெற்றோ, வாய்பேசாதும் மேசியா இவர்தான் என்ற விசுவாசமுதித்தோ, பிறர் சொல்லிக் கேட்டதின் பயனாலோ எப்படியும் இயேசுநாதரைப் பற்றிய ஒரு உயரிய எண்ணம் அவர்களிலிருந்ததுபோலும். ஞானம், பக்தி, சருமம் என்ற முறையாலோ, சரியை, கிரியை, யோக ஞானத்தாலோ, அன்பாலோ, அறிவாலோ, கேள்வியாலோ எப்படியும் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் இயேசுநாதரை ருசித்தல் வேண்டும். மீனைப்பிடிக்கும் வகை பலமுறை போல் வலையிலகப்படும் சிறு மீன்கள் போல் கும்பலாய் மார்க்கத்தைத்தழுவியோ, ஒற்றை மீனை ஓடி ஓடிக் குத்திப்பிடிக்கும் முறையில் பலரைப்போல் அற்புத முறையில் வெளிப்படுதல் பெற்றோ, படிப்படியாய் மறு பிறப்படைந்த நிக்கோதேமைப்போன்றோ, பசியால் வாடி தந்தை வீடடைந்த இளைய மகன் போலோ, எப்படியாயி னும் இதைப்படிக்கும் நாம் இயேசுநாதரை ருசித்த றிதல் வேண்டும். இந்த நாலுபேரே சபையின் மக்கள்.

இந்த நால்வருக்குமொரு நண்பன் திமிர்வாதங் கொண்டு தவித்தான். அவன் மேல் இவர்கள் யாவருக்கும் ஒரே அக்கரை. இந்த அக்கரை இயேசுவை அவர்கள் அறிந்ததின் பயனே. நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன் என்ற கூச்சல் எழுந்த உடனேயே, அசுத்த ஜனங்கள் மத்தியிலிருப்பவன் என தனது ஜனத் தின் பாவத்தையும் உணர்ந்த ஏசாயாபோல் இயேசு நாத ரைக்கண்ட நாம் நம் சகோதரருக்காய் அக்கரை கொள்ளா

கிருக்க இயலாது. ஆத்துமாக்கள் பேரில் தாகம் என்பது குணப்பட்ட மனிதனுக் குண்டாகும் இயற்கையான வாஞ்சை. நம்மில் இது உண்டா? நமது சபையிலுண்டா? என் ஜனத்திற்காய் நானே சபிக்கப்பட்டவனாக விரும்புகிறேன், செத்தாலும் சாகிறேன், இந்த ஆடுகள் என்ன செய்தது என்று கதறின் பவுல், எஸ்தர், மோசேயைப் போல நமது ஜனத்தைப்பற்றிய அக்கறை நம்மிலெழுதல் வேண்டும்.

இந்த நால்வரும் எகோபித்து இயேசுவே இவனுக்குத் தஞ்சம் என்று உறுதியாய் நம்பினார்கள். இக்கால சபைத் தலைவர் பலர் இன்னும் யோவானைப்போல வருகிறவர் நீர் தானா? என்று கேட்பவர்களாகத் தோற்றமளிக்கின்றனர். வயிற்றுப் பிழைப்புக்கெனச் சபை வேலை பார்க்கும் பலரில் இந்த நம்பிக்கை இல்லையெனக் கண்டு நாம் ஏக்கமடைவானேன்? எம்மதமும் சம்மதம் என்ற கிறிஸ்தவரும் பலருளர். இந்தியாவுக்கு இயேசுவே வழி. கருமமார்க்கம். அவர் சிலுவையே மனிதன் கதிபெறும் உயர்வழி. அதைக் கண்டு, அதனுள் புகுந்து, தானும் தனது சாவை எடுப்பதாலேயே கடவுள் தம்மைத்தாமே ஒப்புக்கொடுப்பவர் என்னும் உண்மை நமக்குள் எழும், அவரே சத்தியம். இந்த உண்மையைக் கண்டு, இவ்வழியில் நடக்க ஆற்றலளிக்கும் ஜீவனும் இயேசுவே. இவை விரிக்கில் மிக விரியும். இயேசுவை ஒரு முறை உள்ளபடி ருசித்தவன் தான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்று தைரியம் கொள்வான். எதுவும் அவரை அசைக்காது. சோ. 8:38 நமக்கு மட்டுமல்ல உலகுக்கும் மீட்பர் அவரே.

துணியில் கிடத்தி நாலுமூலையும் கட்டி நாலுபேரும் தூக்கி நிமிர்வரதக்காரணைக்கொண்டு வந்ததுபோல, இக்கால சபைகளும் ஒன்றுயிசைந்து இந்தியாவாகிய நிமிர்வாதக் காரனை இயேசு நாதசைண்டை உயர்த்திச் செல்லுதல் வேண்டும்.

சிலுவைக்கு நேராய்முகத்தைத்திருப்பி எருசலேமுக்கு இயேசுநாதர் போகும் வழியில்கூட, எவன் பெரியவன் என்ற வாதாட்டமே சீடர் மத்தியில் எழுந்தவண்ணம் இக்காலமும் தனி விசுவாசியும், சபைகளும் தந்தம் அனுபவத்தையும் கொள்கைகளையும் பற்றி பெருமைகொண்டு, பிறசோடு ஒத்துழையாது, நோயாளியைச் சாகவிடுவது என்ன பரிதாபம்! சபையாகிய வலையில் எல்லாவித நூற்றைம்பத்தி மூன்று மீன்களும் இருந்தும் வலைகிழியலாகாது. பிரிந்துபோகுதல் பிசாசின் தந்திரம். ஒன்றுபோலுள்ளோரால் சபை கட்டப்படுவதில்லை. ஆதலின் சேர்வோம், இசைவோம், எழுவோம்.

கடைசியாக வாசல் வழியாய் உள்ளே கொண்டுபோக இயலாததால் கூரையைப் பிரித்தார்களாம். என்ன அன்பு! என்ன அக்கரை! நெருப்பணைக்கும் வண்டிக்கு (traffic rules) சட்டதிட்டம் கிடையாது. மற்ற எல்லா வண்டிகளையும் தாண்டவோ, பக்கம் மாறி குறுக்கே ஓடவோ சலுகையுண்டு. ஆத்துமாக்கள் பேரில் அக்கரை கொண்டவன் புதுவழிதிறப்பான். ஆலயம் கிடையாவிட்டால் ஜாண் வெஸ்லியைப்போலக் கல்லறையைப் பிரசங்கமேடையாக்குவான். இந்திய கிறிஸ்தவம் புதுப்புது வழிகளில் உழைத்தல் வேண்டும். திரைப்படம், ஒலிபரப்பி,

செய்தித்தாள், இசைத்தட்டு யாவும் காம் சொந்தமாக்கி இயேசுநாதரைக் காட்டவேண்டும்.

இவர்கள் விசுவாசத்தைக் கண்ட ஆண்டவரும் பாவங்களை மன்னித்து சுமக்கப்பட்டவனைச் (படுக்கைகளை) சுமக்கிறவனுக மாற்றினாரே. இயேசுநாதரை ருசிப்போம். நம் அயலார்மேல் அக்கரை கொண்டு, நம்மைப்போல அவரை ருசித்த மக்களுடன் இசைவோம். திமிர்வாதக் காரனும் இந்தியாவை இயேசுவிடம் கொண்டுவருவோம். தடைகளைக் கண்டு அஞ்சாது புதுப்புது வழிகளில் சேவை செய்வோம். இயேசுநாதர் தாமே நமக்கருள்புரிவாராக.

ஜெபம்.

உண்மையுள்ள கடவுளே, உமது மேன்மைக்குத் தக்கதாக உமக்கு ஊழியஞ் செய்ய எங்களுக்குப் போதித்தருளும். நஷ்டத்தைக் கருதாது கொடுக்கவும், காயத்தைக் கவனியாது போர்புரியவும், இளைப்பாறுதலைத் தேடாது முயலவும், உமது சித்தத்தைச் செய்கிறோம் என்று அறிவதையே அன்றி வேறு பிரதிப்பலனை நாடாது உழைக்கவும், போதித்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:-

L. M. S. Book Depot,
Nagercoil.

Dioceson Book Depot,
Palayamkottai.

Christian Literature Society,
P. B. 501, Park Town,
Madras.
or
The Author.

Gemini Press, Nagercoil.